கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

APR 1957
MADRAS

கண்ணன் கிளைக் கழகம்

மயூரம்
உப தலைவர்: R. பாலசுப்பிரமணியம்
செயலாளர்: R. நாராயணசுவாமி
பொருளாளர்: J. சிதாராமன்

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அலர்நேசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'பாரதி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. சிறுவர் வாசகசாலையும் மாதந்தோறும் சிறுவர் இலக்கியக் கூட்டமும் நடத்தப்படுகின்றன.

இக்கரைப்பற்று (இலங்கை)
உப தலைவர்: ஏ. ஆர். எம். விசுறுல் ஹாபி
செயளாலர்: கே. எம். நஜுமுதீன்
உப செயலாளர்: எஸ். எம். ஏ காதர்
பொருளாளர்: எஸ். எல். ஷரிபுதீன்

பதிமூன்று பேர்கள்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'முல்லை' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் வாசகசாலையும் ஆரம்பிக்கத் திர்மானிக்கப்பட்டுள்ளன. எம். ஏ. மூகையதீன், 5-ஆம் குறிச்சி, இக்கரைப்பற்று (இலங்கை) என்ற விலாசத்துக்கு உங்கள் விஷயதானத்தை அனுப்பலாம்.

பேனு நண்பர்கள்

1. K. பாலசந்திரன், c/o M. R. ஜயராமன், B.Sc., 287, சோமவரர் பேட்டை, புனு-2.

2. P. ராம்ஜி c/o P. பசுபதி, 203/2, ராஸ்தாபேட்டை, புனு-2.

2. R. ராஜன், 54, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.

4. B. சுதாகர், 12, சக்கரியா காலனி, 2-ஆவது தெரு, கோடம் பாக்கம், சென்னை-24.

5. M. R. வேங்கடராமன், 10, கஜபதி நாயுடு தெரு, அமைந் கரை, சென்னை-30.

6. D. சந்தானகிருஷ்ணன், s/o T. P. தீனதயாள நாயுடு, 39/ மேலத் தெரு, அறந்தாங்கி.

7. H. M. உஸ்மான், 70, காந்தி ரோடு, குடியாத்தம்.

8. B. ராஜசேகர், 74, வள்ளாளந் தெரு, பாண்டி.

9. M. ராமநாதன், c/o M. T. T. K. M. மகிபாலன்பட்டி, ராம நாதபுரம் ஜில்லா.

10. S. S. G. ராஜா, s/o S. S. குருசாமி நாடார், 8, காளியம்மன் கோயில் தெரு, விருதுநகர்.

11. M. தமிழ்மணி, 415, 2-ஆவது மெயின் ரோடு, வேங்கடரங்க புரம், பெங்களூர்-3.

12. T. H. சௌந்தரராஜன், 41, லக்ஷ்மிபுரம், 3-ஆவது தெரு, மதுரை.

13. S. ராதாகிருஷ்ணன், 23, தெற்குத் தெரு, கணபதி நகர், தஞ்சாவூர்.

14. G. S. S. குமாரசுவாமி, பரிசுத்த கிறித்துவ பாடசாலை, புசலாவ, இலங்கை.

15. Y. C. M. ரபீக், 151, குருகொடை, அக்குறணை, கண்டி.

16. பெ. சுப்பிரமணியம், வெளிகங்கை டிவிஷன், உளப்பனை, இலங்கை.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 6

15 - 3 - '57

குழந்தைகளே! பக்கம் 2
தபால் பெட்டி .. 3
ஏன் எழுதவில்லை? .. 5
அந்தச் சிலை .. 7
புதுப் பெண் .. 13
இரண்டு வருஷக் கட்டை .. 18
குற்றவாளி யார்? .. 24
சைனு சு - சூ! .. 29
நீங்களும் நானும் .. 35
உலகுக்கு ஓர் ஆசிரியர் .. 37
அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ணு
செய்திகள் - 2-அட்டை
கிளைக் கழகம் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

கெடாத விளம்பரம்!

குழந்தைகளே!

இந்த இதழில் ஆதிசங்கரரின் வரலாறு பற்றிய அரிய கட்டுரை ஒன்று வெளியாகியிருக்கிறது. பாரத நாட்டைப் புண்ணிய பூமி என்று அனைவரும் வழங்குகிறார்கள். உலகுக்கே வழிகாட்டியாக விளங்கிய பல முனிவர்களும் மகான்களும் அவதரித்துப் புனிதமடைந்த நாடு இது. அவர்கள் ஏற்றி வைத்த அறிவு விளக்கு இன்றும் இந்த நாட்டில் ஒளி வீசித் திகழ்கிறது. இந்த ஒளி நமக்கு என்றும் மங்காத ஒளி காட்டிக் கொண்டுதான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இளமையிலேயே அத்தகைய மகான்களுடைய தூய வாழ்க்கையையும் பெருமையையும் நன்கு அறிந்துகொண்டால் பின்னால் மிகவும் பயனடைவார்கள் என்பது திண்ணம். உலகம் எப்படி மாறினாலும் அறிவுச் செல்வம் சிறக்க, நாம் மேன்மையோடு விளங்குவோம்.

ஆதிசங்கரர் அவர்களின் வழிவந்த ஸ்ரீகாமகோடி பீடாதிபதி அவர்கள் பட்டம் ஏற்று இன்றுடன் சரியாக ஐம்பதாண்டுகள் ஆகின்றன. பல இடங்களில் இந்தப் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சென்னையில் ஒரு வாரம்போல் இந்த விழா நடைபெறுகிறது. இப்படிப்பட்ட நல்ல தருணத்தில் நம் சிறுவர் உலகுக்கு ஆதிசங்கரரின் பெருமையை விளக்கும் இந்தக் கட்டுரையை மகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். இந்தக் கட்டுரை பற்றிய உங்களுடைய கருத்தைத் தெரிவித்தால் உங்களுடைய உற்சாகத்தையும் ஈடுபாட்டையும் நான் ஓரளவு தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

அடுத்த இதழில் சைனா சு-சூ என்ற தொடர்கதை நிறைவுறுகிறது. பல மாதங்கள் உங்களை மகிழ்வித்த இந்தத் தொடர்கதை எல்லாருடைய பாராட்டுக்களையும் அமோகமாகப் பெற்றுவிட்டது கண்டு பெருமை கொள்கிறேன். விரைவில் இது புத்தக உருவில் கண்ணன் வெளியீடாக வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புது வருஷப் பிறப்பு இதழிலிருந்து மற்றொரு முதல் பரிசு பெற்ற தொடர்கதையை வெளியிடலாம் என்று எண்ணியிருக்கிறோம். 'அந்தச் சிலை' ஒரு விதம் என்றால், இந்தப் புதிய தொடர்கதை வேறு விதத்தில் உங்களை மகிழ்விக்கும் என்பது நிச்சயம். கதை ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக ஓடுகிறது. ஆகவே தொடர்கதையைத் தவறாமல் முதலிலிருந்தே படிக்க விரும்புபவர்கள் இப்பொழுதே உங்கள் ஊர் ஏஜெண்டிடம் உங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டு விடுங்கள். அவ்வப்போது வாங்கிக்கொள்ளலாம் என்று பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு பழைய பிரதிகளுக்கு இப்போது எழுதுவதுமாதிரி எழுதாதீர்கள். உங்கள் ஊர் ஏஜெண்டு இல்லாத சிறிய ஊராக இருந்தால், நீங்கள் உடனே சந்தாதாராகச் சேர்ந்துவிடுவதே நலம். நீங்கள் எங்கேயிருந்தாலும் உங்களைத் தேடிக்கொண்டு பத்திரிகை வந்து நிற்கும்.

உங்களுக்கெல்லாம் பரீட்சை சமயம் நெருங்கி வந்துவிட்டது. அதனால்தான் சித்திரப் போட்டி பற்றி நான் இப்போது எதுவும் அறிவிக்கவில்லை. முதலில் சிறந்த முறையில் பரீட்சையை அக்கறையோடு கவனியுங்கள். எனக்குக் கடிதம் எழுதுவதைக்கூடக் குறைத்துக்கொண்டு படிப்பில் கவனம் செலுத்துங்கள். அப்புறம் விடுமுறை விட்டால் [illegible] இருக்கிறது; பார்த்துக்கொள்ளலாம்.

கண்ணன் பத்திரிகையின் விலை அடுத்த இதழிலிருந்து 12 நயா பைசாவாகும். 'நீங்களும் நானும்' பகுதியில் 12 நயா பைசா என்று முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அதை நினைவில் வைத்துக்கொண்டால் போதும்.

2/1806

ஆசிரியர்.

வாத்தியாரும் விச்சுவும்

வாத்தியார்:— மரம் விட்டு மரம் பாய்வான்
மந்திபோல் சேஷ்டை செய்வான்
வா லொன்றை வைத்து விட்டால்
வானரம்தான் எங்கள் விச்சு!

விச்சு:— கிழிசல் கோட்டு வேட்டி யுடன்
கிளிஞ்சல் மூக்குக் காதுடனே
சோளக் கொல்லை பொம்மை போலே
சோபிக்கின்ருர் எங்கள் குரு.

வாத்தியார்:— நாலாயிரம் தடவை நானும்
நா வுலரக் கத்தினுலும்
ஓர் அணுவும் ஏருது
ஒட்டுக் களி மண்டையிலே!

விச்சு:— அதிர் வெடி வேட்டுப் போலே
அள்ந்திடுவார் வார்த்தைகளை
காரணங்கள் ஏதுமின்றிக்
காட்டிடுவார் சீற்றந்தனே!

வாத்தியார்:— பாடங்கள் யாவும் வீட்டில்
படித்தாயா விச்சு என்ருல்
'தூக்கமாய் வந்தது நான்
தூங்கினேன் ஸார்' என்றிடுவான்.

விச்சு:— உண்மையே பேசிடுவாய்
உயர்ந்திடுவாய் என்பதெல்லாம்
ஒன்றுக்கும் உதவாதது
ஓங்கிடுவார் கைப் பிரம்பை!

—அப்புக்குட்டி, கவுந்தப்பாடி.

கட்டுரைகள் விஷயம்

அண்ணுவே, வணக்கம்.

தங்கள் பத்திரிகையில் ஒரு கட்டுரைகூட என் பிரசுரிப்பது இல்லை?

—சி. ஆர். நாதன், பொன்மலை.

(நல்ல கட்டுரைகள் வந்தால் அல்லவா, பிரசுரிக்க? இனி நாங்களே எழுத உத்தேசம். ஆ-ர்.)

மற்ருெரு தவறு

15-2-57 இதழில் வெளியான கட்டத்தில் மற்ருெரு தவறு இருக்கிறது. நாலாவது கட்டத்தில் 47 என்றிருப்பதற்குப் பதில் 44 என்று போடப்பட்டிருக்கிறது. —கி. சங்கரன், சு. வெங்கடராமன்.

மடல் தீட்டும் வீரன்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு, தமிழ் வீரன் எழுதும் மடல். ஐயா, மூட்டை அவர்கள் ரப்பர் ஸ்டாம்பு செய்யும் முறையை வெளியிட்டிருந்தார் அல்லவா? அம்முறையைப் பின்பற்றி ராஜாஜி, ராஜன்பாபு ஸ்டாம்புகளை யானே தயாரித்தேன் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

—தமிழ்வீரன், அறந்தாங்கி.

(நின் மடலையும் ஸ்டாம்புகளையும் கண்டு யான் பெரிதும் மகிழ்வுற்றேன். ஆ-ர்.)

தேர்தல் ஹாஸ்யம்

''வாக்காளர்களே!

வணக்கம்!

ரௌடியூர் சட்டசபைக்கு, ஏமாற்றுபுரம் தொகுதியில், பித்தலாட்டக் கட்சி அபேட்சகராக நிற்கும்,

பொதுஜன அபகாரி என்கிற மோசடி நாராயணன் அவர்களை ஆதரித்து, அவருடைய 'கிர்தா கிராப், கத்திரிக்கோல்' சின்னமுள்ள பெட்டியில் தங்கள் வாக்குச் சீட்டுகளைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

பிக்பாக்கெட் குழாம், ஏமாற்றுபுரம்.''

—ஆ. சி. ரங்கநாதன், ஆடுதுறை.

சில கடிதங்கள்

சிலர் வேண்டுமென்றே பிழை மலிந்த கடிதங்கள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இப்படி எழுதுவது கூடாது. என்றால் கண்டுபிடிக்க முடிகிறதா என்று பரிசோதிக்கிறார்கள் போலிருக்கிறது. அப்படி எழுதியவர்களில் பழ. சேதுராமன், (வேந்தன்பட்டி) நல்ல முறையில் பிழையின்றிக் கடிதம் எழுதக்கூடிய தம்பி என்பதை நான் கண்டுபிடித்து விட்டேன். துணுக்கில் பிழையே காணோம். (ஆ-ர்.)

* * * *

உங்கள் போட்டோ ஒன்று வேண்டும்.-டி. புவனேந்திரன், பீளமேடு.

—டி. பி. சீதாராமன், சென்னை-1.

* * * *

அருமையான கதைகள் எழுதி அனுப்பலாமா?—ஜி. பாஷா, திருவண்ணாமலை. (அனுப்பு; அப்புறம் அதன் அருமை தெரியும். ஆ-ர்.)

* * * *

'விஞ்ஞானம் பேசுகிறார்' என்ற புத்தகத்துக்குச் சித்திரங்கள் வரைந்தவர் யார்?

—என். பாலமுருகேசன், சென்னிமலை.

(ஒருவர் ஸாமி; மற்றொருவர் சுசி. இருவரும் எழுதிய சித்திரங்கள் அதில் அடங்கியுள்ளன. ஆ-ர்.)

* * * *

'முக்கனி' தொகுத்த நூல்கள் சொல்லும் செய்திகள் சிறப்பாக உள்ளன. (ஆ-ர்.)

* * * *

எங்கள் ஊருக்கு வந்தால் உங்களுக்குப் புகழ்மாலை சூட்டுவேன்.

—வி. வைத்திலிங்கம், கிருங்காக்கோட்டை.

* * * *

உங்கள் கண்ணன் எப்பொழுது ஆரம்பித்தது? தேதி. மாதம் தேவை.

—தாஜுதீன், ஆக்கூர்.

(1950 ஜனவரி குடியரசு நாளில். ஆ-ர்.)

ஏன் எழுதவில்லை?

'சசிதேவன்'

மளிகைக் கடையின் முதலாளி
மந்தர மூர்த்தி அன்றொருநாள்
வழக்கம் போலக் கல்லாவில்
வந்து அமர்ந்தார் நிம்மதியாய்.
கணக்குப் பிள்ளை செந்தூரான்
கற்சிலை போல விறைப்பாக
அருகே இருந்தான் அப்போது
அவனை நோக்கி முதலாளி,
''ஏன் ஓய் சும்மா இருக்கின்றீர்?
எழுதும் இதனைச் சீக்கிரமாய்;
வீட்டுச் செலவு ஒரு ரூபாய்,
வெற்றிலைச் செலவு கால் ரூபாய்!''
என்றார்; உடனே செந்தூரான்
எடுத்தான் பவுண்டன் பேனவை.
ஆனல், எதுவும் எழுதாமல்
அங்கும், இங்கும் பார்த்திட்டான்;
தரையைப் பார்த்தான் ஒரு நிமிஷம்
தலையைச் சொறிந்தான் மறு நிமிஷம்.

பொறுமை இழந்த முதலாளி
பொங்கும் சினத்துடன் கூறுகிறார்—
''சொல்லச் சொல்லக் கேளாமல்
என்னையா நீர் பண்ணுகிறீர்?
விருப்பம் இருந்தால் கணக்கு எழுதும்;
வேண்டாம் என்றால் விட்டுவிடும்.
வேண்டிய சம்பளம் வாங்குகிறீர்,
வேலை செய்யக் கசக்கிறதோ?''
இப்படி அந்த முதலாளி
இடிக்குர லினிலே கூறியதும்,
உடனே எழுந்தான் செந்தூரான்,
உட்கார்ந் திருந்த இடம்விட்டு;
சொன்னான் இப்படிச் 'சட்'டென்று:
சொல்லிய வார்த்தைகள் கேட்டிடுவீர்—
''மன்னிக்க வேணும், முதலாளி!
மசி இல்லை என் பேனாவில்;
எப்படிக் கணக்கு எழுதிடுவேன்?
ஏழையைக் காத்திட வேண்டும் ஐயா!''
என்றான்; கேட்ட முதலாளி
'இடி இடி' என்று சிரித்திட்டார்.



இயற்கைக் காட்சிகளைப் பருக வேண்டும் என்றால் இந்த மாதிரி இடம்தான் உகந்தது. இயற்கை அன்னை என்பவள்தான் என்ன ஆனந்தமாகக் காட்சியளிக்கிறாள்! ஒரு பக்கம் அகலமான சந்தடியற்ற ஆறு. மறுபுறம் வானைத் தொடும் உயர்ந்த மரங்கள், காற்றில் அழகாகத் தலை வணங்கி சுரேஷுக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்துவன போலிருந்தன. ஆனந்தமான தென்றல் 'குளு குளு' வென்று வீசி, சுரேஷுக்கு உற்சாகத்தை அளித்தது. கண்ணுக்கெட்டிய தூரம் காட்டு மரங்கள் பல வண்ணங்களில் காட்சியளித்து மகிழ்வளித்தன. மூக்கைத் துளைத்துச் சென்றது மலர்களின் இனிய மணம்.

சுரேஷும் அநேகமாக அந்தச் சேரியை அடைந்து விட்டான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ஒரு பெரிய மரத்தின் அடிப் பாகத்தைப் பிளக்க முயன்று கொண்டிருந்தனர் சில விறகு வெட்டிகள். அவர்களை நெருங்கினான். அவர்களும் ஏதோ விசித்திர ஜந்துவைப் பார்ப்பதுபோல் சுரேஷையே கவனித்துக்கொண்டிருந்தனர். சுரேஷ், "உங்களில் யாராவது சற்று வரமுடியுமா?" என்று தணிவாகக் கேட்டான். மறுநொடி அவர்கள் அனைவருமே சுரேஷைச் சூழ்ந்து கொண்டு விட்டனர். "ஒருவர் வந்தால் போதும். உங்களால் ஒரு காரியம் ஆகவேண்டும்" என்று அவன் கேட்டுக் கொள்ளவே, சற்றுக் கட்டுமஸ்தான தேகம் உடைய ஆள் சுரேஷிடம் வந்தான். அவர்களிடம் சொல்லி விட்டுச் சுரேஷ் அந்த ஆளுடன் முன் நடந்தான்.

"இந்தாப்பா ஆளு! பறங்கியன் காட்டுக்குச் சற்று வரமுடியுமா?" என்று கேட்டான். 'பறங்கியன் காடு' என்றதுமே அந்த ஆள் திடுக்கிட்டு விட்டான். "என்ன சாமி, என்னை உயிரோடு பார்க்கறது உங்களுக்குப் பிடிக்கலிங்களா?" என்று மறுமொழி அளித்தான். சுரேஷ் சிரித்துக் கொண்டே, "நம்மை மீறி என்ன நடந்துடப் போவுது? எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டும். சம்மானமும் தருகிறேன். நீ தைரியமாகப் போ" என்று தைரியம் கூறினான்.

பிறகு அவனே தொடர்ந்தான். "அந்தக் காட்டில் 'சர்ப்பகந்தி' வேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். உனக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்குமென நம்புகிறேன். நீ நேராகக் காட்டின் வெளியே உள்ள பங்களாவுக்குப் போய் அதன் சொந்தக்காரனிடம் அனுமதி வாங்கிக்கொண்டு உள்ளே போ. கிடைத்தால் பார்க்கிறது. இல்லாவிட்டால் ஒன்றும் குடி முழுகி விடப் போவதில்லை" என்றான்.

விறகு வெட்டிக்கும் தைரியம் வந்தது. "அந்தப் பங்களாவிலும் பறங்கியன்தான் இருக்கிறான். அது

என்னவோ சாமி, அந்தப் பக்கம் போவறதுக்கே சனங்க நடுங்கிச் சாகருங்க. இருந்தாலும் உங்களுக் காக நான் போய்ப் பார்க்கிறே னுங்க'' என்று ஒப்புக் கொண் டான்.

சில பேருக்குச் சுபாவமாகவே பிறரை ஆகர்ஷிக்கும் சக்தி உண்டு. முக வசீகரமே சில பேருக்கு அவ் வாறு அமைந்துவிடும். மற்றும் சிலர் தோற்றத்தில் விகாரமான உருவம் கொண்டிருந்தால்கூட, அவர்கள் பேச்சில் ஒரு வசீகரம் இருக்கும். அதன் உதவியைக் கொண்டு எளிதில் தங்கள் காரியங் களைச் செய்துகொள்ள முடியும் அவர்களால். மனோதத்துவம் 'மெஸ்மரிஸம்' போன்ற முறை யின் ஒரு சிறு அம்சமேதான் இது.

அந்த வசீகரண சக்தி சுரேஷிடம் நிறைய இருந் தது. விறகு வெட் டியைப் பணிய வைத்ததும் அந்த வசீகர சக்தி தான்.

தூரத்தில் கம் பீரமான சிவப்புக் கட்டிடம் ஒன்று தனியாகத் தெரிந் தது. அதன் தோற் றம் நடுக்காட்டில் ஓர் அரக்கனை நினைப்பூட்டி, சுபா வமாகவே யாவருக் கும் கிலியை அளித்தது. இரண்டு மூன்று பர்லாங் இருக்கும்போதே சுரேஷ் நின்று கொண்டுவிட்டான்.

''நான் வரவில்லை. நீ மட்டும் போய்விட்டு வா. இங்கேயே நான் காத்திருக்கிறேன்'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டான். சுரேஷ் அப்புறம்தான் ஒரு வேடிக்கை யான காரியம் செய்தான்.

பூட்ஸைத் தன் காலிலிருந்து கழற்றினான். மறைவான இடத்தில் வைத்தான். பிறகு மரத்தின் கணுக்களில் கால் வைத்து மெது வாக ஏறத் தொடங்கினான். பிறகு சௌகரியமாக ஒரு கிளையில் அமர்ந்து கொண்டான். தற்போது அந்த மரத்தின் அருகில் யாராவது வந்தாலும்கூட, கிளையில் ஒரு 'நர வானரம்' அமர்ந்திருப்பதை நிச்சயம் கண்டுபிடிக்க முடியாது! அவ்வளவு கன கச்சிதமான உடை கள் அவனை மரத்துடன் ஒன்று சேர்த்தன!

கிளைகளில் அமர்ந்த அவன் தன் நிஜார்ப் பைகளிலிருந்து இரண்டு பொருள்களை எடுத்தான். ஒன்று:

குண்டு வைத்து அடைக்கப்பட்ட கைத்துப்பாக்கி, மற்றொன்று: பைனகுலர்!

ஆம்....துப்பாக்கி லைஸென் ஸுடன் வீட்டுப் பாதுகாப்புக்காக வைக்கப் பட்டது. பைனகுலர், நீச்சல் போட்டிக்காக வாடகைக்கு வாங்கி வந்தவற்றில் தனக்கே சொந்தமாக வாங்கிக்கொண்ட மிகவும் உயர்ந்த வகையைச் சேர்ந் தது அது.

தற்போது இரண்டும் இரு அரிய பொக்கிஷங்கள் சுரேஷுக்கு. ரிவால்வரைச் சிறிது நேரம் சரி பார்த்துவிட்டுப் பழையபடி நிஜார்ப் பையில் போட்டுக்கொண் டான். பைனகுலரை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு கண்களுக்கு அருகில் வைத்துக் கொண்டான்.

தற்போது..?

அவனுக்கு முன்பு 'டெலிவிஷன்' நிகழ்ச்சி ஒன்று நடந்துகொண் டிருந்தது.

விறகு வெட்டி சற்றுக் கஷ்டப் பட்டே முன்னேற வேண்டியிருந் தது பாதையில். அநேகமாக அவனும், சிவப்புக் கட்டடத்தை அடைந்தேவிட்டான் என்று சொல்லவேண்டும்.

ஆனல்..ஆனல்..?

கட்டடத்தின் முன் ஒரு பெரிய துரவு. அந்தக் கிணற்றை யொட்டி நீண்ட முள்வேலி ஒன்று சென்றது காட்டைச் சுற்றி. ஒரே வழிதான் கட்டடத்தை அடைய. அதுவும் துரவுதான். அதை ஜாக்கிரதையாகக் கடந்து விட் டால் சிவப்புக் கட்டடத்தை அடைந்து விடலாம். மிகவும் அபாய கரமான நிலையில் இருக்கும் துர வின் கைப் பிடிச்சுவர் பைனகுலர் மூலம் நன்கு பார்க்க முடிந்தது.

விறகு வெட்டி சற்று நேரம் தயங்கி நின்றான். பிறகு..அருகி

னுள்ள புல்தரைக்குச் சென்ருன். சில நிமிஷங்களில், பல்வகைக் கொடிகளைச் சேர்த்து முறுக்கிய நீண்ட 'கயிறு' ஒன்றுடன் வெளிப் பட்டான் அவன். துரவின் வெளிப் பக்கம் தரையில் ஒரு பலமான 'முளை' அடித்துவிட்டு அதில் கயிற்றின் ஒரு நுனியைக் கட்டி ஞன். மறு நுனியைத் தன் இடுப் பில் சுற்றிக் கட்டிக் கொண்டு வெதுவாகக் கைப்பிடிச் சுவரின் மேல் ஏறத் தொடங்கினுன் அவன். அவன் ஏறுவதில் மிகுந்த ஜாக்கி ரதை காணப்பட்டாலும் மிடுக்கு ஒன்றும் கலந்திருந்தது. அவன் செல்லும் காட்சி மலை ஏறுபவர் களை நினைப்பு மூட்டியது சுரே ஷுக்கு. ஆரம்பத்தில் கைப்பிடிச் சுவரிலிருந்த சில செங்கற்கள் ஆட்டம் கொடுத்தன. விறகு வெட்டி எவ்வளவு ஜாக்கிரதை யாக இருக்க முடியுமோ அவ்வளவு முன் எச்சரிக்கை செய்துகொண்ட தால் விபத்து நேராது தடுக்கப் பட்டது.

ஒரு வழியாகத் துரவையும் கடந்து விட்டான் அவன். தன் இடுப்பிலிருந்த கயிற்றின் நுனியை அவிழ்த்து அதன்மேல் பாரம் ஒன்றையும் வைத்து விட்டு, கட்டடத்தின் வாசலை அடைந்தான் அவன்.

* * *

சுரேஷ் இன்னும் உஷாராஞன். அவனுடைய கைகள் பைனுகுலரை இறுகப் பிடித்துக் கொண்டன. அவனுடைய 'கழுகுக் கண்கள்' இன்னும் தீட்சண்யமாயின.

* * *

விறகு வெட்டி கட்டடத்தின் வெளி வாசலை அடைந்தான். அங் கேயே நின்றபடி இரு கைகளை யும் சேர்த்துத் தட்டி உள்ளே இருப்பவரைக் கூப்பிட்டான். அப் போதுதான் ஒரு வேடிக்கை நடந் தது. உள்ளிருந்து, வேட்டைநாய் போலப் பாய்ந்து வந்தது ஓர் உருவம். அதன் துடிக்கும் உதடு கள், ''உனக்கு என்ன வேலை? எங்கே வந்தாய், எப்படி வந்தாய்? உடனே வெளியேறு'' என்று 'பட பட' வென்று வார்த்தைகளை ஸகஸ்ர நாமார்ச்சனையுடன் கலந்து ஆங்கிலத்தில் கொட்டின.

''சாமி, சர்ப்பகந்தி வேருங்க.. இங்கேதான் கிடைக்கும் என்று சொன்னுங்க..கேட்டுக்கிட்டுப் பறிச்சுடலாம்னு..''

வார்த்தைகளை அவன் முடிக்க வில்லை. 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது அவனது கன்னத்தில். விறகு வெட்டி இதை எதிர்பார்க்க வில்லை. ஆனுல் அவனே நல்ல உடற்கட்டு வாய்ந்தவன். ஆங் கிலேயனை எதிர்க்க முயன்ருன். அந்த உருவம் மறுபடியும் உள்ளே ஓடியது. திரும்பி வரும்போது..

ஒரு துப்பாக்கி, கைத்துப்பாக்கி தான். ஒரு நிமிஷம் என்ன நினைத் ததோ என்னவோ தெரியவில்லை. ''சீக்கிரம் போ'' என்று விரட்டி யடித்தது அவனை. விறகு வெட்டி, துப்பாக்கியைக் கண்டதும் நடுங்கி விட்டான். திரும்பினுன் அவன்.

சிலகண நேரமே..பழையபடி துரவின் மறுபுறத்தை அடைந்து விட்டான்.

* * *

நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு சுரேஷ் பற்களை 'நற நற' வென்று கடித்தான். அவர்களுக் கிடையே நடந்த சம்பாஷணை அவன் காதில் விழுந்திருக்க முடி யாது. ஆனுலும் தான் கண்ட சம்பவங்கள் அவனுக்கு ஆத் திரத்தை மூட்டின. ஆனுல், அவன் தொழில் அதுவல்லவே?

தான் எந்த ஒரு நோக்கத்துக்கு வந்தானே அதையும் பூர்த்தி செய்து கொண்டுவிட்டான் அவன். அவனது 'போட்டோக் கண்கள்' ஆங்கிலேயனைப் படம் பிடித்துக் கொண்டு விட்டன.

படபடவென்று அடித்துக்கொள் ளும் கண்கள் 'ரெட்டிஷ் ப்ரௌ' னும், பச்சையும் கலந்த நிறமான விழிகள் (ஹேஸல் கிரீன்), சற்றே பழுப்பு நிறமான தலைமயிரும், ரத்தச் சிவப்பான தேகமும், ஒல்லி யான உடலமைப்பும், நிதான மில்லாத கரங்களின் தடுமாற்றமும் சுரேஷினுல் கவனிக்கப்பட்டன. யாவும் அந்த ஆங்கிலேயனது

(ஐரோப்பியனது) சுபாவத்தை நன்கு புலப்படுத்தின. அது போதும் சுரேஷுக்கு. சுரேஷ் விரும்பியது என்ன? பங்களாச் சொந்தக்காரர் சந்தேகப்படும் படியாக இருக்கிறூரா, என்பதுதான்! அவன் எதிர் பார்த்தது கிடைத்துவிட்டது.

தற்போது ஆங்கிலேயன் பழைய படி உள்ளே சென்றுவிட்டான். அந்தக் கட்டடத்திற்கு ஜன்னல் ஒன்றும் கிடையாது.

ஆனல்..

துரவின் அருகே, கட்டடத்தைச் சுற்றி சிறிய செப்புக் கம்பி ஒன்று தரையுடன் ஒட்டினற் போல் செல்வது நன்ருகத் தெரிந்தது சுரேஷுக்கு. மேலும் தாமதப் படுத்தாமல் 'போர்னியோ ஏப்' பின் உருவத்திலிருந்து மனிதனுக மாறினன் சுரேஷ். பைனுகுலரை உள்ளே வைத்தான். பழையபடி 'பூட்ஸை' மாட்டிக் கொண்டான். விறகுவெட்டி வரும் சமயத்தில் நல்ல பிள்ளையாகக் காட்சியளித்தான் அவன்.

விறகு வெட்டிக்கோ ஒரே எரிச்சல். ஓர் ஆளுக்காகத் தான் செல்வது, காரியத்தில் தோல்வி, காரணமின்றி அறை வாங்கியது. அவனுடைய கன்னங்கள் 'சவ்' வென்றிருந்தன. ஆங்கிலேயனின் ஐந்து விரல்களும் அதில் பதிந்திருந்தன.

ஆங்கிலேயனிடம் காட்டவேண்டிய கோபம் அனைத்தையும் சுரேஷிடம் கொட்டி விடுவதென்று வேகமாக வந்துகொண் டிருந்தான் அவன். சுரேஷின் கமல முகத்தைக் கண்டதும் அவனுக்கு எங்கிருந்தோ ஓர் அன்பு கலந்த மரியாதை வந்துவிட்டது. ''காரியம் சுகமா யில்லே சாமி. கொல்றத்துக்குப் பதிலா அடியோடு விட்டான் அவன். அதான் மிச்சம்'' என்று தனக்குக் கிடைத்த வரவேற்பைச் சுரேஷிடம் விவரிக்க ஆரம்பித்தான் அவன். ஒன்றும் தெரியாதவன்போல் சுரேஷும் 'உம்' கொட்டிக்கொண் டிருந்தான்!

கடைசியில் அவன், ''உன் சகபாடிகளிடம் யாரிடமும் அறை வாங்கினய் என்பதைச் சொல்ல வேண்டாம். சமயத்துக்கு நானே

அறைந்ததாகச் சொல்வதில் மோசமில்லை. உன் ஒத்தாசைக்கு நன்றி. வேர் கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. இன்னெரு முறை உன்னைப் பார்க்கிறேன். நடந்த விஷயங்களையும் ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்'' என்று கேட்டுக் கொள்வதுபோல் எச்சரிக்கை செய்து விட்டு, புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினன்.

விறகு வெட்டிக்கு மிகுந்த திருப்தி. ''ரொம்ப சந்தோஷமுங்க. இந்தப் பக்கம் என்ன உதவி வேண்டுமானலும் சொல்லுங்க. நான் கவனிச்சிக்கறேன்'' என்று கூறிவிட்டு, ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு நடந்தான் அவன். படகுத் துறைக்குப் புறப்பட்டான் சுரேஷ்.

படகிலிருந்து இறங்கியதும் நேராக ஜிம்மியினிடம் சென்ருன். அதன் முன்னங்கால்கள் இரண்டை

யும் பிடித்துக் குபீரென்று உயரத் தூக்கினன்.

குஷி வந்துவிட்டது ஜிம்மிக்கு.

சுரேஷுடன் விளையாட ஆரம்பித்தது அது. ''நான் போற இடத்துக்கெல்லாம் வரணும்னு கட்டற காரியம்தானு?'' என்று செல்லமாகக் கூறிக்கொண்டே தனது இடதுபக்கமிருந்த நிஜார்ப் பையிலிருந்து ஒரு 'பாக்கெட்'டை எடுத்தான். வெடுக்கென்று பல்லால் அவன் கையிலிருந்து இழுத்துவிட்டது ஜிம்மி. மறு நிமிஷம் அதிலிருந்த பிஸ்கட்டுகள் அதன் வயிற்றுக்குள் மறைந்துவிட்டன.

''சேச்சே, உனக்கு 'ஓவர் பிரீடம்' கொடுத்தது தப்பான்னு போயிடுத்து'' என்று கூறிக்கொண்டே நாயைக் கட்டினன் அவன்.

6. சுரேஷின் கலக்கம்

இதுவரை தனக்குக் கிடைத்த விஷயங்களைக் கொண்டு ஆராய முற்பட்டான் அவன். 'மேனட்டில் கட்டிலிலுள்ள ஒரு ஸ்க்ரூ ஆணியை வைத்துக்கொண்டு பெரிய கொலையைப் பற்றிய மர்மங்களையெல்லாம் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆனல் நாமோ?' என்று அலுத்துக் கொண்டான் அவன்.

மர்ம வார்த்தையை விடுவித்து விட்டால் போதும்.

ஏழை, லக்ஷ ரூபாய் கிடைத்து விட்டால் போதும் என்று நினைப்பது மாதிரியல்லவா இருக்கிறது! என்று தன்னைத்தானே நொந்து கொண்டான் அவன்.

ஜிம்மி ஏதோ விஷமம் செய்து கொண்டிருந்தது.

சுரேஷின் எதிரே வைத்திருந்த ஆவி பறந்துகொண் டிருந்த காபி இப்போது ஐஸை நினைவுப்படுத்தினுலும் அந்த இடத்திலேயேதான் இருந்தது.

இச்சமயம்தான்....

அறைக் கதவு மடேரெனத் திறந்து கொண்டது. திடுக்கிட்ட சுரேஷ் நிமிர்ந்தான். எதிரே..?

முகத்தில் கோபம் பறக்க, சேகர் தான் நின்றுகொண் டிருந்தான்.

''சுரேஷ்! இன்று இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று வந்திருக்கிறேன். ஒரு வாரமாக உனது நடவடிக்கைகள் பிடிபடவில்லை. ரெக்ரியேஷன் கிளப்புக்கும் வருவதில்லை. என்னுடன் பேசி ஏழு நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. சங்கக் கூட்டங்களையும் ஒழுங்காகக் கூட்டுவதில்லை. பொறுப்பே உன்னை விட்டு நீங்கிவிட்டதோ என்று நினைக்கிறேன். பேசாமல் உன் பதவியை ராஜிநரமாச் செய்துவிடு'' என்று படபடத்தான்;

''சேகர், உட்காரேன் தயவு செய்து.''

''என்ன உட்கார்? எனக்குப் பதில் சொல் முதலில்'' என்று கத்தினன் சேகர்.

கிழிதாளிலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்தான் சுரேஷ். விருவிருவென்று ஏதோ எழுதினன். ''இதைக் 'காபி' செய்து சர்க்குலர் அனுப்பிவிடு'' என்று கூறினன்.

''சங்கத்தின் அலுவல்கள் ஒரு மாதத்திற்குத் தாற்காலிகமாக நிறுத்தப்படுகின்றன. நிவாரண நிதிப்பணமும் கலெக்டரின் மூலம் விசேஷ நிகழ்ச்சிக் கொண்டாட்டம் எதுவுமில்லாமல் எளிய முறையில் அனுப்பப்படும்.

சுரேஷ்,
தலைமைக் காரியதரிசி.''

சேகர் அதை வாங்கி மடித்துத் தன் பையில் போட்டுக்கொண்டான். பிறகு 'நண்பன்' என்ற முறையில் பேச ஆரம்பித்தான் அவன். அவனது கைகள் சுரேஷ் சற்று நேரம் முன்பு தன் கையில் வைத்திருந்த பேப்பரைப் பலவந்தமாகப் பறித்தன. அதில்..

'ஒயிட் ரோஸ் கார்டன்ஸ் அமைப்பு!'

எந்த ஒன்று ஒருவருக்கும் தெரியக் கூடாது என்று எண்ணினனே அது சேகரின் கையில் இப்போது இருந்தது!

(தொடரும்)

புதுப் பெண்

இரா. முகி

1

நான்தான் எங்கள் சர்க்கஸ் கம்பெனியின் ஜீவநாடி என்று எல்லோரும் சொன்னார்கள். இத்தனை நாள்வரை நானும் அதை மனப்பூர்வமாக நம்பியிருந்தேன். கானலை நீரென்று நினைத்துக் கண நேரப் புகழில் மயங்கிக் கிடந்தேன்! மயக்கம் தெளிந்ததும் மனக்கவலையால் நெளிகின்றேன்! 'பார்' வேலை செய்துவிட்டு கைகளைக் கூப்பியபடி நான் மேடையைச் சுற்றி வந்தால், மக்கள் எப்படி ஆரவாரம் செய்வார்கள்! அப்போது என்னுடைய உள்ளம் பெருமிதத்தால் துள்ளும். ஆனால் இப்போதோ துன்பத்தால் துடிக்கிறது. விஷயத்தைச் சொல்லாமல் பொரிந்துகொண்டு போனால் உங்களுக்கென்ன புரியப் போகிறது?

எவருமற்ற அனாதையான நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 'சங்கரராம் சர்க்கஸ் கம்பெனி'யில் எடுபிடி வேலை செய்யும் சிறுவனாகச் சேர்ந்தேன். அப்போது, 'பெரும் புகழ் அடையப் போகிறோம்' என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. அதேபோல், புகழின் உச்சியில் இருந்தபோதும் எனக்கு ஒருத்தி போட்டியாகக் கிளம்பி, என்னைக் கீழே தள்ளப் போகிறாள் என்று கற்பனைகூடச் செய்ததில்லை. என் நிலை அப்படி!

எடுபிடி வேலை செய்பவனாக இருந்த எனக்குத் திடீரென்று ஒரு நாள் அதிர்ஷ்டம் அடித்தது. வழக்கமாக 'பார்' வேலை செய்யும் ஆள் முதலாளியுடன் ஏற்பட்ட சச்சரவினால் கம்பெனியை விட்டு விலகிவிட்டான். வேறொருவரைப் பயிற்றுவிக்க வேண்டிய அவசியம் நேரிட்டது! அந்த வேலைக்குத் தகுதியான ஆளைத் தேடிக்கொண்டிருந்த முதலாளியின் மனம் என்னைச் சூடிகையுள்ள பையனாகக் கணக்குப்போட்டதோ என்னவோ; எனக்குப் 'பார்' வேலைக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கினார்கள்.

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பார்கள்! நான் வயதில் சிறியவனாக இருந்த போதும், செயலில் பெரியவனாக இருந்தேன். மிகக் கடினமான அற்புதச் செயல்களைக்கூடச் சுருங்கிய நாட்களில் கற்றுக் கொண்டேன். கம்பெனி முதலாளி என் திறமையைக் கண்டு வியந்தார்.

அரங்கேற்ற நாள் வந்தது. உச்சியிலே தொங்கிய ஊஞ்சல்களுக்கிடையே என் உயிரை ஊசலாட விட்டேன். கரணம் தப்பினால் மரணம் என்பதைக் கண் முன்னே பார்த்த மக்கள், "பையன், பெரிய வேலைக்காரன்தான்" என்று வாயாரச் சொன்னார்கள்.

அன்று முதல்தான் என்னுடைய புகழும், எங்கள் கம்பெனியின் வருவாயும் வளரத் தொடங்கின. ஆறு மாதங்கள் அமைதியோடும் அக மகிழ்வோடும் கழிந்தன.

2

அப்போதுதான் எங்கிருந்தோ வந்தாள், ஒரு புதுப் பெண்! இப்போதும் எனக்குத் தெளிவாக நினைவிருக்கிறது, அவள் முதன் முதலில் எங்கள் கம்பெனிக்கு வந்த நாள்! அந்தப் புதுப் பெண்ணைப் பார்க்க என் உள்ளம் விழைந்தது. தனிமையில் காலம் கழித்த எனக்குத் தங்கை ஒருத்தி துணையாக வந்திருப்பதை எண்ணிப் பரவசம் அடைந்தேன். அவளுடன் பேச வேண்டுமென்று மனம் துடித்தது. அடிமேல் அடி வைத்து அவளிருக்கும் இடம் சென்றேன், அறிமுகம் செய்து கொள்ளும் நோக்கத்தோடு! அவள் புலிக் கூண்டருகே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை என்னவென்று அழைப்பது?

"புதுப் பெண்ணே! உன் பெயர் என்ன?' என்று யோசிக்காமல் திடீரென்று கேட்டு விட்டேன். அவள் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்? "யார்?...ஓ.. நீயா..நீலா" என்று விட்டு விட்டுச் சிரித்துக்கொண்டே பதில் சொன்னாள்.

என்னுடைய பெயரைக் கேட்பாள் என்று எதிர்பார்த்தேன். அவளோ ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தாள். நானே துவங்கினேன். ''வந்து..நீலா..ம்..என் பெயர்..!'' நான் முடிப்பதற்குள் நீலா குறுக்கிட்டாள். ''ஓ..தெரியுமே! பாலு அண்ணு!'' என்று 'கலகல' வென்று சிரித்துக் கொண்டே கூறினுள். என் உள்ளம் பூரித்தது. புளகாங்கிதத்தால் புன்முறுவல் பூத்தேன்.

அப்படியான அறிமுகம் கடைசியில் இப்படி முடியுமென்று நான் நினைக்கவே இல்லை. எவளை என் அருமைத் தங்கையாகப் பாவித்து அன்பு செலுத்தினேனே, அவளே எனக்குக் குழி தோண்டத் துவங்கி விட்டாளே! வந்தவளைச் சொந்தத் தங்கையாக எண்ணியதற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது!

நீலா வந்த கொஞ்ச நாட்களுக்குள்ளேயே முதலாளியின் செல்ல மகளாகி விட்டாள். நீலாவுக்குப் 'பார்'வேலை கற்றுத் தரும்படி அவர் என்னிடம் சொன்னுர். மனநிறை

வோடு ஏற்றுக்கொண்டேன், நீலாவைப் பயிற்றுவிக்கும் பணியை! அப்போது எனக்குத் தெரியுமா என்ன, நீலாவின் வஞ்சக எண்ணம்?

நீலா விரைவிலேயே எல்லாவற்றையும் கற்றுக்கொண்டாள். எனக்கு அவளை மேடையேற்றிப் பார்க்க வேண்டுமென்று விருப்பம் வந்தது.

முதலாளியிடம் கூறி ஒப்புதலும் பெற்றேன். அவர், ஆதரவு குறைந்தால், கம்பெனி ஆட்டங் கொடுக்குமே என்று அஞ்சினுர். கடைசியில் நீலாவை அரங்கேற்றிப் பார்க்கும் எண்ணத்தில் வெற்றியடைந்தவன் நான்தான். அப்பப்பா..அரங்கேற்ற நாளில் அவள் செய்து காட்டிய அபார வித்தைகளைப் பார்த்தபோது எனக்கு மெய் சிலிர்த்தது. என்னையே மிஞ்சிவிட்டாள் என்பதை உணர்ந்து மகிழ்ந்தேன். பிறகு எனக்குப் பதில் அவளையே தினமும் மேடையில் தோன்றச் செய்தேன். ஒவ்வொரு நாளும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

பிறகுதான் என்னுடைய நிலையும் மாறத் தொடங்கிற்று. நீலாவை எல்லோரும் பாராட்டினுர்கள். முதலாளியும்இனிநீலாவே 'பார்' வேலைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும் என்று கூறினுர். நான் அவளுக்கு உதவியாளனும்! நீலாவின் சூழ்ச்சி எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல், குழியும் பறித்த கதை ஆகிவிட்டதே!

3

அன்று நீலா நானிருக்கும் இடம் தேடி வந்தாள். நான் அவளைக் கவனியாதவன் போல் இருந்தேன். அவள் என்னருகில் வந்து நின்ருள்.

''பாலு! ஏன் என்னேடு முகம்

கொடுத்தே பேசமாட்டேன் என்கிருய்? நான் என்ன குற்றம் செய்து விட்டேன்?'' என்று விக்கிய குரலில் கேட்டாள்.

''வேறு என்ன குற்றம் செய்ய வேண்டும்? செய்த நன்றியை மறந்தது மட்டுமில்லாமல் அதைக் கொன்றும் விட்ட ஒன்று போதாதா?

''உன்னேடு எனக்கென்ன பேச்சு? மெல்ல என் வேலையைக் கவர்ந்துகொண்டாய். இன்னும் சில நாட்கள் போனல் என்னை இங்கிருந்தே விரட்டியும் விடுவாய்'' என்று ஆத்திரத்தோடு கூறினேன். கண்களை உயர்த்தி அவளைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தேன். நீலாவின் கண்களில் நீர் தேங்கியிருந்தது. எல்லாம் வேஷம்! செய்வதையும் செய்துவிட்டு அழுகை வேறு?

''பாலு அண்ணு! அப்படியெல்லாம் என்னைப்பற்றித் தவருக நினைத்துக்கொள்ளாதே! நேற்று முதலாளியிடம் போய், வேலையை உனக்கே தரும்படி சொன்னேன். ஆனல் இப்போது என்னல்தான் கம்பெனிக்கு முன்பிருந்ததை விடப் பணம் அதிகம் கிடைப்பதாகவும், இந்தச்சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது என்றும் சொல்லி விட்டார். நான் என்ன செய்யட்டும், பாலு!'' என்று உருக்கமாகக் கேட்டாள், நீலா. அவளுடைய பேச்சு எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டதுபோல் இருந்தது. முதலாளிக்கு நேற்று வந்த புதுப் பெண்ணிடம் இருக்கிற நம்பிக்கை என்னிடம் இல்லையாக்கும்!

''என்ன செய்வதா? உன் கைகளை முறித்துக்கொள். அப்போது தான் என்னுடைய திறமையில் முதலாளிக்கு நம்பிக்கை வரும். நீ என் முன்னல் நிற்காதே! போ!'' என்று கொடூரத்தோடு பேசினேன். நீலா என்னை ஏறிட்டுப் பார்த்தாள். ''உன் விருப்பம் அதுவானல் அப்படியே செய்கிறேன், பாலு!'' என்று உறுதி தொனிக்கக் கூறி விட்டுப் போய்விட்டாள்.

மனத்தில் போராட்டம் எழுந்தது. 'சீ என்ன இருந்தாலும் நான் அவ்வளவு ஆத்திரத்தோடு பேசியிருக்கக்கூடாது! ம்..ம்..பேசினல் என்ன குறைந்து போயிற்ரும்! இதுவும் பேச வேண்டும்.. இன்னமும் பேசவேண்டும்!'

4

அன்று இனம் தெரியாத கலக்கம் என் மனத்தை வாட்



காப்பியடித்து எழுதி அனுப்பப்படும் கதைகள் ஆசிரியருக்குத் தொந்தரவு தராமலிருக்கத் தபால் பெட்டியிலேயே இப்படி ஒரு யந்திரம் வைத்துவிட்டால்......?

டியது. ஏனென்று எனக்குத் தெரியவில்லே. நிகழப் போகிற ஒரு பயங்கரத்திற்குக் கட்டியங் கூறுவதுபோல் ஏதோ ஒன்று என் உள்ளத்துக்குள் குடைந்து கொண்டிருந்தது! எப்படியோ ஒரு வழியாகச் சர்க்கஸ் கொட்டகையை அடைந்தேன். காட்சிகள் கிரமமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஏக்கத்தோடு நின்றிருந்தேன். எவரோ என்னருகில் வருவதை உணர்ந்து தலேயை உயர்த்திப் பார்த்தேன். நீலா மேடைக்குச் செல்லத் தயாராக வந்துகொண்டிருந்தாள், வண்ண உடைகளோடு! என்னருகில் வந்து ஒரு கணம் நின்ருள். ''பாலு! இன்று உன்னுடைய விருப்பம் நிறைவேறப் போகிறது! அப்புறமாவது என்னுடன் பழையபடி பழகுவாய் அல்லவா?'' என்று மெல்லிய குரலில் கூறிவிட்டுச் சிரித்துக் கொண்டே சென்ருள். என்ன ஆணவம்! நான் சொன்னதைத் திருப்பிச் சொல்லிச் சிரிக்கிருளே! நேற்றுவரை நானிருந்த இடத்தை இன்று தான் அபகரித்துக் கொண்டதால் உண்டான மமதை நீலாவை இப்படியெல்லாம் அலட்சியமாக நடந்து கொள்ள வைக்கிறது!

மக்கள் கைகொட்டி நீலாவை வரவேற்ருர்கள். என்னேயும் ஒரு காலத்தில் இப்படி வரவேற்றவர்கள்தாம், இன்று இன்னொரு புதுப் பெண்ணுக்கு அதனிலும் சிறந்த பெருமை அளிக்கிருர்கள். என்ன உலகம், இது? என்னுடைய மனம் அவமானத்தால் கூனிக் குறுகிப் போயிற்று.

நீலா தன்னுடைய வித்தையைத் துவங்கினுள். என்னதான் எனக்கு அவள் மீது ஆத்திரம் இருந்தாலும், அவளது அபாரமான திறமையைக் கண்டு என்னுல் வியக்காமல் இருக்க முடியவில்லே. ஊஞ்சல்களுக்கிடையில் எப்படித் தாவிப் பறக்கிருள்! அதுவும் இன்று அவளுடைய ஆட்டத்தில் அசுரவேகம் இருந்ததைக் கண்டேன். நீலா இங்கும் அங்கும் தாவித் தன் உயிரைப் பணயம் வைத்து வித்தை செய்வதைப் பார்த்ததும் என் உணர்வு கலங்கிற்று. அவளேயே பார்த்துக் கொண்டிருந்தேன். நீலா என்னேப் பார்த்துக் கையைக் காட்டி ஏதோ குறிப்புக் காட்டிவிட்டுப் பழையபடி தன் காரியத்தில் கண்ணுனுள்.

என் மனத்தில் திடீரென்று என்னவோ பயம் உதித்தது. ''பாலு! இன்று உன்னுடைய விருப்பம் நிறைவேறப் போகிறது! அப்புறமாவது என்னேடு பழையபடி பழகுவாய் அல்லவா?'' என்று நீலா பேசியது நினைவுக்கு வந்தது.

ஐயோ, நீலா!—ஒரு சுயநலக்காரனின் அசட்டு மொழிகளுக்காக அப்படித் துணிகரமான செயலேச் செய்து விடாதே! 'நீலா! நீலா!' என்று உரக்கக் கூவி அவளுடைய அடாத செயலேத் தடுக்க வேண்டுமென்று எண்ணினேன்.

ஆனுல், அதற்குள்—

எதை நடக்க விடக்கூடாது என்று கடைசி நேரத்தில் ஆசைப்பட்டேனே...

உயரத்தில் ஊஞ்சலிலிருந்து பாய்ந்த நீலா வலேக்கு அப்பால் எங்கோ தரையை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்ததைப் பார்த்தும் என்னுல் ஒன்றும் செய்ய முடியவில்லேயே! மனம் பதைக்க அவள் விழுந்த இடத்தை நோக்கி ஓடினேன். கூட்டத்தை இடித்து நெருக்கிக்கொண்டு உள்ளே நுழைந்து உணர்வற்றிருந்த என் அருமைத் தங்கையைப் பார்த்தேன். அதற்கு முன்னே டாக்டர் அவளேப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். உயிருக்கு ஆபத்தில்லேயாம். ஆனுல் இனிமேல் அவள் கைகளேக் கொண்டு 'பார்' வேலே ஏதும் செய்ய முடியாதாம். கை நரம்பு முறிந்து போயிற்ரும்.

என்னுல் நீலாவுக்கு நேர்ந்த துன்பத்தை நினேத்து என் உள்ளம் உதிரம் கொட்டிற்று!

இரண்டு வருஷக் கட்டை

எஸ். விசுவநாதன்

1

சேகரின் கண்கள் இரண்டும் 'நோட்டீஸ் போர்'டிலேயே பதிந்திருந்தன. ஒரு கண நேரத்திற்குள் அந்தக் கண்களில் சுழன்ற ஆர்வமும், அவநம்பிக்கையும் எங்கோ ஓடி மறைந்து கொண்டன. வெற்றிக் களையோடு ஒரு புன்னகை செய்து கொண்டே, கண்களில் விநோதமான ஓர் இன்ப ஒளி வீச அவன் கபாலியைப் பார்த்தான்.

கபாலிக்குத் 'திக்'கென்றது. கண்களைச் சுழற்றிச் சுழற்றி மனத்தைத் தளரவிடாமல் மேலும் பார்த்தான். அவனுடைய 'நம்பர்' அதில் இருந்தால்தானே? கண்களை இருட்டிக்கொண்டு வந்தது அவனுக்கு. நெஞ்சில் பலவிதமான உணர்ச்சிகள் மின்னல்கள்போல் வெட்டி வெட்டி மின்னின. அவன் முகத்தில் ஒளி மங்கி, தோல்வியின் நிழல் படரத் தொடங்கவும் யாரையும் பார்க்கப் பிடிக்காமல் பள்ளிக்கூடக் காம்பவுண்டு சுவரைத் தாண்டி வெளியே வந்தான்.

எங்கே போவது, என்ன செய்வது என்றெல்லாம் யோசிக்க உணர்வில்லை. கருத்து இந்த உலகிலேயே இல்லை. மனம் எங்கோ சுழன்றுகொண் டிருந்தது. அப்பப்பா! என்ன பயங்கரம்! இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் பயமாக இருந்தது அவனுக்கு. இன்னும் ஒரு வருஷம் அந்த வகுப்பில் உட்கார்ந்து வாசிப்பதென்றால்..?

2

பள்ளிக்கூடம் திறந்துவிட்டார்கள். எல்லோருக்கும் உற்சாகம் கங்கு கரை கடந்து பொங்குகிறது. அவனுடன் படித்தவர்கள் எல்லாம் அவனை அநுதாபத்துடன் பார்த்துக்கொண்டே போனார்கள். ஆனால் அவன்..?

வெட்கமும் வெறுப்பும் மாறி மாறி வதைக்க, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அவன் வகுப்பில் சென்று உட்கார்ந்து கொண்டான். கடைசி பெஞ்சில் திறந்த ஜன்னல் அருகே சிந்தனையே ஓடாமல் பைத்தியம் பிடித்ததுபோல் உட்கார்ந்திருந்தான்.

புதுப் புத்தகங்களுக்குப் பட்டியல் வந்தது. 'எல்லாம் அந்தப் பழைய புத்தகங்களே போதும் என்று வைத்துத் தொலைக்கலாகாதா? அவர்களைச் சொல்லுவானேன்! மறுமுறையும் மானங்கெட்டுப் படிக்க வந்தேனே' என்று அலுப்பும் வெறுப்புமாகச் சொல்லிக்கொண்டான் கபாலி.

அன்று திங்கள் கிழமை. வகுப்புத் துவங்கி வெகு நேரம் ஆகிவிட்டது. கபாலியின் கையில் சயின்ஸ் புத்தகம் இல்லாததைக் கண்ட ஆசிரியர், ''அடே, இரண்டு வருஷக் கட்டை! புத்தகம் பழசில்லை, புதிது என்று தெரியுமா? ஏன் வாங்கவில்லை?'' என்று பெருங்குரலில் கர்ஜித்தார். விலவிலத்து நடுங்கியபடியே எழுந்து நின்றான் கபாலி. ''இன்னும் வாங்க..வில்லை..சார்..!'' என்று இழுத்தான் உதறலுடன்.

''வாங்காமல் பின்னே இங்கே தூங்கவா வந்தாய்?'' - 'பளார்' என்று ஓர் அறை வைத்தார்.

''ஐயோ சார்..இன்றைக்கே வாங்கிவிடுகிறேன்..சார்..'' என்று பொங்கி வரும் அழுகையையும் மீறித் திணறியபடி பதிலளித்தான் கபாலி.

ஆனால் பள்ளிக்கூடம் விட்ட பிறகு, 'எப்படி அப்பாவைக் கேட்பது? வாங்கித் தருவாரா? ஆங்கிலப் புத்தகம் வாங்கவேண்டும் என்று அன்றைக்குச் சொன்னதற்கே, 'எல்லாம் பழசு போதும்; இருக்கிறதை வைத்துக்கொண்டு படி!' என்றாரே! இன்று இரண்டரை ரூபாய்ப் புத்தகம் எங்கே

வாங்கித் தரப் போகிறுர்? எதற்கும் அப்பா ' மண்டிக் கடையிலிருந்து வந்ததும் கேட்டுவிடலாம்; தந்தால் வாங்குவது, இல்லாவிட்டால் எப்படியோ நடக்கட்டும்!' என்று மனத்தில் திடம் செய்துகொண்டு, அப்பா வந்ததும் அவரிடம் தயங்கினுன்.

''அப்பா!..''

''என்னடா வெட்கங் கெட்டவனே?''

கபாலிக்கு முகம் சுண்டிவிட்டது. கேட்கும் முன்னேயே இப்படியா?

''சயின்ஸ் புத்தகம்..''

''போன வருஷம் வாங்கவில்லையா?''

''போன வருஷத்துப் புத்தகமில்லை இந்த வருஷத்துக்கு..''

''இல்லாவிட்டால் என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாதே! போ இங்கிருந்து.''

''நாளைக்குப் புத்தகமில்லை என்ருல் ஆசிரியர் அடித்து வெளியே விரட்டிவிடுவார் அப்பா..''

''அடியை வாங்கிக்கொள்; வெளியேயும் போ!''

'என்ன நெஞ்சமோ!' என்று மனத்துள் வெம்பினுன் கபாலி.

''அப்பா..!''

அப்பா 'விருட்' என்று எழுந்தார். கோபத்தில் அவர் முகம் 'ஜிவு ஜிவு' என்று ரத்தம் போலச் சிவந்திருந்தது.

''ஏண்டா, 'போ போ, இங்கே நிற்காதே' என்று சொல்கிறேன்; நீபாட்டுக்கு 'அப்பா, அப்பா' என்று மெள்ள சுருதிச் கூட்டுகிருயே! சொன்னுல் தெரியாது உனக்கு? மனிதன் படும் கஷ்டங்களை உணரத் தெரியாத ஜன்மங்கள்!'' என்று ஆத்திரத்துடன் கன்னங்களில் மாற்றி மாற்றி அறைந்தார். அது போதாதோ என்று தலையில் குட்டும் வைத்தார்.

கபாலி வாயைத் திறந்து அழவேயில்லை. கண்களில் நீர் மாத்திரம் புள்ளி புள்ளியாக மழை பெய்த பின் மின் கம்பிகளில் முத்துப் போல் நிற்கும் மழைத் துளிபோல் நின்றது.

ஆனுல் அவன் உதடுகள் ஆத்திரத்தினுலும், சினத்தினுலும் படபடத்தன. என்ன பேசுகிறோம் என்ற தன்னுணர்வு இல்லாமல் கத்திவிட்டான்: ''வாங்கித் தரவக்கு இல்லாவிட்டால் இப்படி ஒன்றும் அறைய வேண்டியதில்லை!''

''அடே, உன் வாழ்வுக்கு அப்பனிடமே எதிர்த்து வாயாடுகிருயா? நாயே, வெளியே போ! இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்கக் கூடாது..ம்..போ!'' அவருக்கு உடல் பதைத்தது. கையை ஓங்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

கபாலி இதுவரை தன் தகப்பனுரிடம் எதிர்த்துப் பேசியதில்லை. தகப்பனுரின் பேச்சைத் தட்டியது

யாருடைய பணம்?

கூட இல்லே. அவர் ஆவேசத்துடன் அடிக்கவும், அவனும் அதைப் பொறுக்காமல் சினத்தில் கூவி விட்டான். உடல் சரியில்லாத நிலையில், வீட்டுத் தொல்லே, மண்டிக்கடைச் செட்டியாரின் அதிகமான கெடுபிடிகள், போதிய ஓய்வு இல்லாமை எல்லாமாகச் சேர்ந்து அவரை அப்போது கோபத்தின் உச்சநிலேயில் அமர்த்தி யிருந்தன. அவர் கடன்பட்டிருந்த இடத்திலிருந்து அப்பொழுதுதான் ஆள் வேறு வந்து போயிருந்தான். இவை யெல்லாம் சேரவும், தம் பிள்ளேயே இப்படித் தம்மை எதிர்த்துப் பேசி விட்டானே என்ற சின வேகத்தில் அவனே வெளியே விரட்டினர். கொடியில் உலர்ந்துகொண் டிருந்த அவ னுடைய வெள்ளேச் சட்டையையும் நிஜாரையும் உருவி அவன் முகத் தில் வீசி யடித்தார்.

''ஏதோ தெரியாமல் பேசி விட்டேன் அப்பா..இனிமேல்..''

''போடா என்கிறேன், நிற் கிருயா, நாயே?'' என்று அவர் உறுமியவண்ணம் அவனே நோக்கிப் பாயவும், கபாலி சட்டையையும் நிஜாரையும் அணேத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான், ஆவேசம் வந்தவன் போல. 'எல்லோரும் 'பெயிலா'னதும் ஓடிப் போவார் கள்; நாம் அதற்கடுத்த கட்டத் தில் அப்பாவாலேயே துரத்தப் படுகிருேம்!' என்று எண்ணிக் கொண்டான். அம்மா அப்போது வெளியே எங்கோ போயிருந்தாள். அம்மாவைக்கூடப் பார்க்காமல் போகிருேமே என்ற தாபம் அவ னுள் பொங்கியது.

நிஜார் ஜேபியிலிருந்த சிறிய மணிபர்சை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்...எப்போதோ எடுத்த படம் அது..அவன் அம்மாவும், அப்பாவும் சேர்ந்தாற்போல் நின்ற வாக்கில் எடுத்தது. பர்சைக் கவிழ்த்துப் பார்த்தான். ஆறு ஓரணு; ஓர் அரையணு!

3

கபாலி அன்று இரவு பத்துமணி வரையிலும் அங்கே இங்கே என்று சுற்றினுன். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லே. 'இரவு எங்கே தங்குவது?'—இந்தக் கேள்வி அவன் மனத்தில் எழுந்த தும், 'ரெயில்வே ஸ்டேஷன்தான் சரி!' என்ற பதிலும் கூடவே எழுந்தது.

விடிகாலே நாலு, நாலரை மணி வாக்கில் சற்று மயங்கினுற் போல் கிடந்தான், கைப்பையை அணேத் துக் கொண்டு. ஆறு மணிக்கு அங் கிருந்து எழுந்தான். பைப் அருகே பல் தேய்த்து முகம் கழுவிக் கொண் டான். கண்களில் நீர் பட்டபோது எரிந்தது. இரவு முழுதும் விளக் கொளியில் விழித்த பலன்! ஒரு ஒட்டலில் நுழைந்து இட்லியையும் காபியையும் வயிற்றுக்குள் தள்ளி ஞன். 'யாரிடமாவது வேலே கேட் டால் கிடைக்காதா?' என்று சிற்சில இடங்களில் ஏறி இறங்கி அலுத்து விட்டது கபாலிக்கு. 'ஏன்தான் பெயிலானேமோ!'

பசியும், களேப்பும் வருத்த நடைப்பாதை யோரம் வந்து அமர்ந்தான்.

இரண்டு சிறுவர்கள், பாதை ஓர மாகக் கட்டை யொன்றின்மீது வீசி எறிந்துவிட்டுப் போயிருந்த வாழைப்பழத் தோலேப் பாய்ந்து எடுத்துக்கொண்டனர்.

கபாலி அந்த 'வருங்கால மன்னர்'களேப் பார்த்தான்.

''வேறே ஒண்ணுங் கெடைக் கலே! என்ன செய்றது?'' என்று சிரித்த முகத்துடன் ஒரு சிறுவன் கபாலியைப் பார்த்துக்கொண்டே சொல்லிவிட்டு அதை வாயில் வைத்துக் கடித்தான்.

'இவர்களே யெல்லாம் இப் படியே தெருத் திரியவிடுவதால் தான், பெரியவர்களானதும் வாழ வழியில்லாமல் திருட்டுக்களிலும், பெருங்கொள்ளே - கொலேகளிலும் ஈடுபடுகிருர்கள்! இப்பொழுதே இவர்களுக்குச் சர்க்கார் தொழிற் பள்ளிகளில் சேர்த்து, பயிற்றுவித் தால் அவர்கள் வாழ்வுக்கு - இனி வாழப் போகிறவரின் வாழ்வுக்கு - ஒரு வழி வகுத்த மாதிரி ஆகுமே; என்றைக்கு இதைக் கவனிக்கப்

போகிறது அரசாங்கம்?' - என்ற எண்ணம் கபாலியின் மனத்தில் ஓடியது. அந்த நினைவில் அவன் மூழ்கி ஆழ்ந்திருந்தபோது, யாரோ ஒரு நாகரிகக் கனவான் வீசி யெறிந்துவிட்டுப் போன அணைக்காத சிகரெட்டுத் துண்டு கால் கட்டைவிரலில் பட்டு 'சுட்' டென்று பொசுக்கியதும்தான் நினைவு வந்து நிமிர்ந்து பார்த்தான். 'என்ன நீதியற்ற வாழ்க்கை! வாழ முடியாது தத்தளிக்கும் மக்கள் ஒரு புறம்; வாழ்வில் துன்பக் கலப்பே இல்லாது வாழும் இவர் போன்ற மக்கள் ஒரு புறம்! இதை நீதியுடன் நிறுக்க ஒரு தராசும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லையே! உயிரற்ற-பண்டங்களின் நிறையைக் காலணுவுக்கும், அரையணுவுக்கும் நிறுத்துப் பார்க்கும் உலகம், நடமாடும்-உயிர்களை-விலை மதிப்பற்ற மக்கட் செல்வத்தை-ஏன் வீதித் தராசில் நிறுத்துப் பார்ப்பதில்லை?..'

இப்படி எண்ணியபடியே நடந்து, ஒரு சிறு பங்களாவின் 'கேட்' அருகே வந்து நின்றான் கபாலி. 'பளிச்'சென்ற நீல எனுமல் போர்டில், 'டாக்டர்

''ஏம்பா, நீ நேற்று ஒழுங்காகப் பேசினியே, இன்னிக்கி எப்படி ஊமையாயிட்டே?''

''இல்லிங்க சாமி.. நான் நேத்துகூடக் ஊமைதானுங்க.''

பாஸ்கரன், எம். பி., பி. எஸ்.' என்று பொறித்திருந்தது. 'இவரிடம் சிற்றுள் வேலேயோ, இல்லே ஏதேனும் பொருள் உதவியோ கேட்கலாமா? உதவுவாரா? இல்லே விரட்டுவாரா? பங்களா வாசியல்லவோ!'..

அவன் 'லீடர் மணி' என்றொரு சிறுவர் நாவலில் இப்படிப் படித்திருக்கிறுன்: '..பெரும்பாலான பங்களாவாசிகள், காலணு கொடுப்பதாக இருந்தாலும், அவர்கள் கொடுத்த விஷயம் ஏதாவது ஒரு பத்திரிகையில் வெளியாவதாக இருந்தால்தான் கொடுப்பார்கள். மிஞ்சி மிஞ்சிக் கேட்கப் போனுல், முதலில் வாசலில் உள்ள நாயை விட்டு நம்மைத் துரத்தி விடுவார்கள்..' எவ்வளவு உண்மையான வார்த்தை! அப்படிப்பட்டவராயிருந்தால் வேலே தருவாரா? எதற்கும் துணிந்து விட்டான் கபாலி. 'கேட்'டை மெதுவாகத் தள்ளி, புல் தரையில் காலெடுத்து வைத்தான். இருபுறமும் அழகிய தோட்டம்; ஒரு நோட்டம் விட்டான். நாய் இருப்பதாகத் தெரியவில்லே. தைரியமாக நடந்து சென்று பங்களா வாயில் கதவருகே பொருத்தியிருந்த 'காலிங் பெல்'லே அழுத்திஞன். அப்பொழுதுதான் புறப்பட்டுக்கொண் டிருந்த ஒரு வாலிபர் கழுத்தில் 'ஸ்டெதஸ் கோப்'புடன் (துடிப்பறி கருவி) வெளியே வந்தார், மருந்துப் பெட்டியுடன் பின் தொடர்ந்த வேலேக்காரனுடன். பின்னுல் சற்று வயதான ஓர் அம்மாளும் வந்தாள்; டாக்டர், ''என்ன வேண்டும்?'' என்ற பாவனேயில் தலேயை அசைத்தார்.

''நான் நாலாவது பாரம் படித்துக் கொண்டிருக்கிறேன். மேலே படிக்க வசதியில்லே. ஏதாவது வேலே கிடைத்தால் உபகாரமாயிருக்கும். நன்றியை மறக்க மாட்டேன்.. உண்மையாக உழைப்பேன்..''

இலேசாகப் புன்னகை பூத்த அவர் அந்த அம்மாளிடம், ''என்ன, வைத்துக்கொள்ளலாமா?'' என்ருர் எடுத்த எடுப்பில். ஏனென்ருல் அவருக்குப் 'பில்' வசூலிக்க, உதவி கம்பவுண்டர் வேலேக்கு, வீட்டுச் சில்லறைக் காரியங்களுக்கு எல்லாம் ஒரு சுறுசுறுப்பான ஆள் தேவையாகத்தான் இருந்தது.

அவர் சொன்னுர்: ''ஆனுல் நாங்கள் எல்லோரும் கோயமுத்தூர் போகிருேம், அம்பி! இனி பங்களா, டிஸ்பென்சரி எல்லாம் அங்கேதான். உனக்கு வர விருப்பமா? உனக்கு உறவினர் ஒருவரும் இல்லேயே?''

''இல்லே!'' என்று துணிந்து ஒரு பொய்யைப் போட்ட கபாலி, ''எனக்குப் பூரண சம்மதம், சார்! இப்பொழுதேகூட வரத் தயார்!'' என்ருன். அவர் சிறு நகையொன்று உதிர்த்துவிட்டு, ''டிரைவர்!'' என்று கூப்பிடவும், ''இதோ எசமான்!'' என்று நீண்ட கறுப்புக் காரை 'போர்டிகோ'வில் நிறுத்திஞன் டிரைவர்.

4

கபாலி அவருடன் இருந்து கம்பவுண்டர் வேலே யெல்லாம் சிறுகச் சிறுகக் கற்றுக் கொண்டான். 'பில்' வசூலிப்பதற்கும்

அவனே போய் வந்தான். அவர் வீட்டிலேயேதான் வாசம். வீட்டு வேலையையும் இடையிடையே கவனித்துக்கொண்டான். இரவில் டாக்டரிடம் ஒரு மணி நேரம் ஆங்கிலம் படிப்பான்; கணக்குச் சொல்லிக்கொள்வான். செய்தித்தாள் படிப்பான். அறிவு வளர்ச்சிக்குதவும் நூல்களைப் படிப்பான். வேறு என்ன வேண்டும்?



கோயமுத்தூர் வாழ்க்கை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. நல்ல சாப்பாடு; முழு மனத்தையும் ஈடுபடுத்தும் வேலை. படிப்பு; ஓய்வு; உறக்கம். இடையிடையே அவனுக்குப் பெற்ருேர் ஞாபகமும் வந்துவிடும். அந்தச் சமயத்தில் கண்ணில் நீர் தேங்கும். மனம் வேதனையால் வெம்பும். டாக்டரின் தாயைக் காணும்போது, தன் அன்னையைக் காண்பது போலிருக்கும். 'அம்மா!' என்று உறக்கத்தில்கூடக் கூவியிருக்கிருன். 'என்ருவது ஒரு நாள் பார்ப்போம்!' என்று ஆறுதல் சொல்லிக்கொண்டு தேறுதல் அடைவான்.

காலத்தின் சுழற்சியில் இரண்டு வருடங்கள் தேய்ந்து மறைந்தன. நோயாளிகளுடன் பழகுவதிலேயே கபாலியின் மனம் பக்குவமடைந்துவிட்டது. டாக்டர் பாஸ்கரனின் அன்பில் அவன் கட்டுண்டான்.

5

அன்று சிகிச்சைச் சாலையில் புதிதாக ஒரு நோயாளி அநுமதிக்கப்பட்டிருந்தார். ''கபாலி..!'' என்று கூப்பிட்டார் டாக்டர் பாஸ்கரன்.

''இதோ வந்துவிட்டேன், சார்!..''

''மருந்துப் பெட்டியுடன் இரண்டாவது 'ப்ளாக்'கிற்கு வா!'' என்று கூறிவிட்டு அவர் 'டக்டக்' சென்று சென்றுவிட்டார்.

இரண்டாவது ப்ளாக்கில் அவன் கண்ட காட்சி—! அவன் தகப்பனுர் கட்டிலில்; அருகே அவன் தாயார் கவலை தேங்கிய முகத்துடன்! ''உயிருக்கு ஆபத்தில்லையே, டாக்டர்? எப்படியாவது பிழைப்பு மூட்டுங்கள், டாக்டர்! உங்களுக்குப் புண்ணியமுண்டு!'' என்று விம்மினுள் அவன் தாயார். ''இன்றைய ஆபரேஷனில் எல்லாம் சரியாகிவிடும், அம்மா! கவலைப் படாதீர்கள்!'' என்ருர் டாக்டர் கனிவுடன்.

''அம்மா! அப்பா!..'' என்று கூவிக்கொண்டு உள்ளே பாய்ந்தான் கபாலி. கட்டிலில் இளைத்துக் கறுத்துப் படுத்திருந்த அவன் தகப்பனுர் ஆதரவுடன் அவனை அணைத்துக்கொண்டார். கோயமுத்தூரில் பிழைப்புக்காக வந்ததையும், வயிற்றில் வலி கண்டு, இங்கே சிகிச்சைக்கு வந்ததையும் தாய் கூறினுள். கபாலி, ''எப்படியாவது அப்பாவைக் காப்பாற்றுங்கள், டாக்டர்!'' என்று கண்ணீர் மல்க, உருக்கமுடன் கூறினுன்.

''நிச்சயம்!'' என்று புன்னகையுடன் கூறினுர் பாஸ்கரன்!

குற்றவாளி யார்?

இரா. பாஸ்கரன்

அன்று தினசரிகளுக்கு ஏகக் கிராக்கி. ஒவ்வொருவர் கையிலும் பத்திரிகை இருந்தது; காரணம்? ஆம்; அன்றுதான் ஒரு பயங்கர வழக்கு பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் வெளியாகி யிருந்தது.

''சங்கரம் பிள்ளை வீட்டின் அந்தரங்க வேலையாள் முனியனின் கோரக்கொலை....தோட்டக்காரப் பக்கிரியிடம் முனியன் எடுத்துச் சென்ற பணம் கிட்டியதால் அவனைக் கைது செய்துள்ளனர். மேலும் புலன் விசாரணையாகிறது: குற்றம் ருசுவானல் பக்கிரிக்குத் தூக்கு.'' - இதுதான் பத்திரிகைச் செய்தி; ''அந்த நல்லவனு இதைச் செய்தான்?'' இது நல்ல இதயங் கொண்டவர்களின் கேள்வி.

''நல்லவனு அவன்! வஞ்சகப் பூனையல்லவா?'' இது வஞ்சகர்களின் வசைமொழி.

''சங்கரம் பிள்ளைதான் அவன் செய்திருப்பானென்று புகார் செய்திருக்கிருரே!'' இது பெரிய மனிதருக்கு ஒத்துப் பாடும் சிலரின் அர்த்த மற்ற பதில்.

எப்படியானுலென்ன? பிடிபட்டவன் பக்கிரி! பாவம், பரம ஏழையான பக்கிரி குற்றவாளியானுன்.

''இது அடுக்குமா?'' - உலகம் அலறியது.

''அலருதே! விரைவில் தண்டனையும் கிட்டும்'' என்றனர் வேஷதாரிகள்.

மருதம்பட்டியின் ஒப்பற்ற தனவந்தர்தான் சங்கரம்பிள்ளை. அவருடைய அந்தரங்க வேலையாள் தான் முனியன்; இளமை முதல் அவரிடமே வளர்ந்தவன்: அநாதையானுலும் நல்ல இதயங்கொண்டவன்; அவரின் மறைவால் எங்கும் ஒரே அதிர்ச்சி; பலர் பதறினர்; சிலர் கடிந்தனர்: எங்கே சென்ருலும் சங்கரம் பிள்ளையின் ஆளாக முனியன் செல்வது வழக்கம்; அன்றும் அவர்தான் அவனை எங்கோ அனுப்பி இருந்தார்; அன்று சென்ற அவன் திரும்பவே இல்லை: அவன் பிணந்தான் அருகிலுள்ள காட்டில் கிடைத்தது.

ஆனல்..குற்றவாளி யார்? அதுதான் சிக்கலான சிந்தனை; அச்சிக்கலுக்கு இலக்காகத்தான் பிடிப்பட்டான் பக்கிரி; முனியன் கொண்டு சென்ற ஆயிரம் ரூபாய்கள் பக்கிரியின் இருப்பிடத்தில் இருந்ததால் அவனைக் குற்றவாளியாக்கினர் போலீஸார். அது முதல் பக்கிரி கூண்டுக் கிளியானுன். அவன் குடும்பம் அல்லல் பட்டது.

''உண்மையான குற்றவாளி யார்?'' - இது பன்னிரண்டு வயது நிரம்பாத இளம்பாலகனுன சங்கரம் பிள்ளையின் மகன் சுந்தரத்தின் கேள்வி: பக்கிரி அந்தக் கொலையை செய்திருக்க முடியாது என்பது அவன் கருத்து; அப்படியானுல் ....குற்றவாளி யார்? அதுதான் கதையின் மர்மம். அந்த மர்மத்தை உடைத்தெறிய எண்ணினுன் சுந்தர்; அதற்கான சிந்தனையில் ஆழ்ந்தவாறு உள்ளே சென்ருன்.

அங்கே - ஒரு கண்ணுடிக்காரன்; நீண்ட தோற்றம், முறுக்கிய மீசை, அசல் ரௌடி கிர்தா. தன் தந்தையோடு உட்கார்ந்து பேசிக் கொண் டிருப்பதைக் கண்டான். ஏதோ இருவரும் அந்தரங்கமாகப் பேசுவதாகச் சுந்தருக்குப் பட்டது. இரண்டொரு வார்த்தைகளும் காதில் பட்டன.

''இன்று மாலை ரெயிலில் சரக்கு வருகிறது'' என்ருன் கண்ணுடிக்காரன்.

''ஓ! அப்படியா!'' - அதற்குள் சுந்தரைப் பார்த்துவிடவே அவர்

களின் சம்பாஷணை நின்றது; பேச்சு சுந்தரின் பக்கம் மாறியது.

''இவன்தான் என் மகன் சுந்தர்'' என்றார் சங்கரம் பிள்ளை.

''ஓ! ஓ!! அப்படியா!!! நல்ல பிள்ளையாகத்தான் இருக்கிறான்'' என்றான் கண்ணாடிக்காரன். சுந்தருக்கு ஏன் அங்கே வந்தோமென்றாகிவிட்டது. அவர்களைக் கவனியாதவன்போல் வெளியே சென்றுவிட்டான்; வெளியில் ஒரு மூலையில் சிந்தனையில் அமர்ந்திருந்தான் சுந்தர்.

''கண்ணாடிக்காரன் யார்? அவனுக்கும் நம் தந்தைக்கும் என்ன தொடர்பு?''- சிந்தித்தான், சிந்தித்தான்; ஆனால் விடை கிட்டவில்லை; ''சரி; ரெயிலில் ஏதோ வருவதாகக் கூறினானே, போய்ப் பார்த்தால் புரிகிறது'' என்று நிம்மதி யடைந்தான் சுந்தர்.

''ஆனால் எப்பொழுது போவது?'' - மற்றொரு கேள்வி எழுந்தது. ''ஆம்: அது சரி; தந்தை போனதும் நாமும் சென்றால் புரி கின்றன'' என்று நிம்மதியடைந்தான்.

அப்பொழுது..காலடி யோசை கேட்டது; அந்தக் கண்ணாடிக்காரன்தான் சங்கரம் பிள்ளையிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான்; அவன் போன திக்கையே பார்த்துச் சுந்தர் மெய்மறந்து நின்றான். குற்றவாளி யார் எனக் காணப் புகுந்த அவனுக்கு மற்றொரு துப்பும் கிட்டும்போலிருந்தது.

அன்று பகலெல்லாம் சுந்தருக்கு இருப்புக் கொள்ளவில்லை. தன் தந்தை போகும் நேரத்தை எதிர் பார்த்திருந்தான்; அவரும் சற்று முன்தான் வெளியில் சென்றிருந்தார்; சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தில் மணி பார்த்தான். 10; ஒரே இருள்....உற்சாகத்தோடு மாறுவேடம் பூண்டு சைக்கிளில் கிளம்பினான் ரெயில்வே நிலையத்தை நோக்கி.

வழி நெடுகக் கண்ணாடிக்காரன் யார்? அவன் ஏன் தன் தந்தையிடம் உறவு கொள்ளவேண்டும்? பொருள்களை அனுப்புவது யார்? என்ற சிந்தனைக் கடலில் மூழ்கியவாறு சென்றான்.

அப்பொழுது - எதிரே ஒரு ஜீப் பறந்து வந்தது. அந்த ஜீப் சுந்தரைக் கடந்து சென்றது. என்ன விந்தை! கண்ணாடிக்காரன் அதில் இருந்தான்; ஆனால்....

பக்கத்திலிருப்பது யார்? நீண்ட தாடி, தலைப்பாகை..அசல் பஞ்சாபிய உடை, ஏற்கனவே சிக்கலில் சிக்கியிருந்த சுந்தரை ஜீப் மற்றொரு சிக்கலில் மாட்டிவைத்தது.

பஞ்சாபிக்காரன் யார்? அது தான் புரியவில்லை; சரி, ஜீப்பைப் பின்தொடரலாமென ஜீப்பைப் பின் தொடர்ந்தான்; ஜீப் விரைந்து போய்க்கொண்டே இருந்தது. சுந்தரும் தன்னால் இயன்றவரை பின் தொடர்ந்தான்.

காட்டையடுத்து ஓர் அழகிய பங்களா. அங்கே சென்றதும் ஜீப் நின்றது: அந்தக் கண்ணாடிக்காரனும், பஞ்சாபி வேஷதாரியும் இறங்கி, பங்களாவின் உள்ளே சென்றனர். சுந்தரும் சைக்கிளை ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டு, ஜீப்பை நோக்கிச் சென்றான்.

''என்ன செய்வது? உள்ளே போகலாம் என்றால் வாயிலில் ஒரு கூர்க்கா நாய்போல் நின்றிருக்கிறானே!''- ஒன்றும் புரியவில்லை சுந்தருக்கு. சிந்தித்தான்; சிந்தித்தான்: சிக்கலான சிந்தனையல்லவா? அப்பொழுது சுந்தரின் கண்களுக்கு ஒரு புதுமை தென்பட்டது. மரம் ஒன்று பங்களாவின் பின்னிருந்து மாடிப்படியை ஊடுருவிச் செல்வதை அவன் கண்டான்.

ஆம். அதுதான் சரி, அந்த மரத்திலேறிப் போய்விடுவோம் என்று எண்ணியவாறு பங்களாவின் பின்புறமாகச் சென்று அந்த மரத்தைப் பற்றி ஏறினான். மேல் மாடியையும் அடைந்துவிட்டான். அங்கே ஒரே இருள்; எதிரிலிருக்கும் ஒன்றும் கண்களுக்குப் புலப்படவில்லை. சுவரை ஊன்றிப் பிடித்தவாறு நடந்தான் சுந்தர்.

என்ன விந்தை - சுவரின் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும், அவன் நின்றிருந்த இடத்திலிருந்து பூமி ஆழ்ந்து அவனைக் கீழே சுவரில் இழுத்துச் சென்றது. தான்

ஊன்றிய இடத்தில்தான் அதற்கான மின்சார விசையுள்ளது என்று அறியச் சுந்தருக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

அந்தப் பலகை அவனைக் கீழுள்ள ஓர் அறைக்குக் கொண்டு சென்றது. அந்தக் கட்டிடம் முழுவதும் பிரகாசமான மின்சார விளக்குகளால் பகல் போலிருந்தது; அங்கே சுவரிலுள்ள கடிகாரம் மணி ஒன்று எனக் காட்டியது.

அந்த அறையின் ஒரு மூலையில் நாலைந்து பேர் படுத்துத் தூங்கிக் கொண் டிருந்தனர். மற்றொரு மூலையிலுள்ள சாய்வு நாற்காலியில் ஒரு மனிதன் பேச்சு மூச்சற்றுப் படுத்திருந்தான்; அந்த அறையில் ஒரே சாராய வாடை வீசியது.

அங்குள்ளவர்கள் குடி போதையில் மூழ்கியுள்ளனர் என்றும், அது கள்ளச்சாராயம் பிராந்தி வியாபாரக் கூட்டமென்றும் அறிந்து கொண்டான் சுந்தர். அந்த நாற்காலியில் படுத்திருப்பவன்தான் தலைவன்போலும் என்றவாறு அருகில் சென்றான்.

அங்கே அவன் கண்ட காட்சி! ''இவரா இந்த வேலையில் ஈடுபட்டார்?'' சுந்தருக்கே விந்தையாக இருந்தது. அந்தப் பஞ்சாபி வேஷதாரி யாரென்று புரிந்துகொண்டு விட்டான் சுந்தர். சுற்றுப் புறத்தை ஆராய்ந்தான். அங்கே மதுபானப் புட்டிகளும் டின்களும் குவியல் குவியலாக இருந்தன. பிணம்போல் கிடக்கும் உருவங்களைக் கண்டான். அவைகள், ''இங்கு யார் வர முடியும்?'' என இறுமாந்து கிடந்தன.

சரி அந்த மனிதனை ஆராய்வோமெனச் சுந்தர் நாற்காலியில் படுத்

திருந்த மனிதனை ஆராய்ந்தான்.

அவன் பாக்கெட்டில் ஒரு கவர் இருந்தது.

அதில்,

''அன்புள்ள நண்பா!

நீ முனியனைக் கொன்றுவிட்டதைப் பற்றி மிகவும் வந்தனம். இனி நம்மை எதிர்க்க யாருமில்லை. நம் விருப்பம் போல் எதையும் செய்யலாம்.

இங்ஙனம்,

ஆறுமுகம்.''

ஆறுமுகமா? யாரது? எந்த ஊர்? கவரிலுள்ள முத்திரையைக் கண்டான். அது பாண்டிச்சேரி எனக் காட்டியது.

''ஓ! ஓ! அங்கிருந்து சரக்குகளை அனுப்புகிறவன் இவன் தான் போலும்'' என்றவாறு சுந்தர் வெளியேறினன்.

மறுநாள் காலை சங்கரம் பிள்ளை ஏதோ சிந்தனையில் மூழ்கி அமர்ந்திருந்தார். அப்பொழுது புயலென அங்கே வந்தான் சுந்தர்.

''அப்பா! குற்றவாளி யாரென்று கண்டுபிடித்துவிட்டேன்'' என்றான் சுந்தர், அவரைப் பார்த்தவாறு.

''என்னடா, உளறுகிறாய்!'' - ஆச்சரியத்துடன் கேட்டார் சங்கரம் பிள்ளை.

''இல்லையப்பா உண்மைதான். அவன் கொலைகாரன் மட்டுமல்ல அரசியல் துரோகி. இதோ அழைத்து வருகிறேன்'' என்று விரைந்தோடினன் சுந்தர். சங்கரம் பிள்ளை ஒன்றும் புரியாமல் விழித்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு சுந்தர் போலீஸுடன் வந்து சேர்ந்தான். சங்கரம் பிள்ளை சாய்வு நாற்காலியில் கண்களை மூடியவாறு படுத்திருந்தார்.

''இதோ பெரிய மனிதரான இவர்தான் குற்றவாளி. பஞ்சாபி வேடமணிந்து ஏய்த்த இவர்தான் குற்றவாளி'' என்று தன் தந்தையைக் காட்டியவாறு வீரிட்டுக் கத்தினன் சுந்தர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒன்றும் விளங்காமல் சங்கரம் பிள்ளைக்கு விலங்கிடக் கட்டளையிட்டார்; ஒரு போலீஸ் கனவான் விலங்கோடு அவரிடம் சென்றான். அவர் அசைவற்ற மரமாகி விட்ட

தைக் கண்ட போலீஸ் கனவான், ''ஐயோ! பிணம்!'' என்று அலறினர்.

''என்ன பிணமா!'' - பதற்றத்துடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''ஆ!'' எனச் சுந்தர் அலறியவாறு அருகில் சென்ருன். சங்கரம் பிள்ளையின் பக்கத்திலிருந்த மேஜையின்மேல் ஒரு கடிதம் சுந்தரை நோக்கிப் புன்னகை பூத்தது. ஆவலோடும், துக்கத்தோடும் அதை எடுத்துப் பிரித்தான் சுந்தர்.

''அன்பார்ந்த செல்வா!

நான் பாவி, வஞ்சகன், உன்னை வாழ வைக்க முடியாதவன். என்னை மன்னித்து விடு. நான்தான் குற்றவாளி. இன்று நீ பதற்றத்துடன் சென்றதும், என் பையிலிருந்த காகிதம் களவு போனதை உணர்ந்தேன். அது நீ கழற்றிப் போட்டு விட்டுச் சென்ற சட்டைப் பையில் இருந்தது. தந்தையாளுலும் தண்டிக்கத் துணிந்த உன்னைப் பாராட்டுகிறேன். இனி உனக்குப் பக்கிரிதான் சகலமும். அவனைக் காப்பாற்று.

இங்ஙனம்,

தந்தை சங்கரம் பிள்ளை.''



''உங்கப்பா என்ன ராகம் பாடறார்?''

''கானடா ராகம்.''

''அடே! தேவலையே! அப்போ உங்கப்பாவுக்கு லண்டன் ராகம், நியூ யார்க் ராகம் எல்லாங்கூடத் தெரியும்னு சொல்லு!''

கண்ணீரால் காகிதத்தை நிரப்பினன் சுந்தர். ''இப்படிப்பட்ட வஞ்சகத் தந்தை இறப்பதே மேல்'' என்றது அவனுள்ளம். பக்கத்திலிருந்த இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தில் மெய்ம்மறந்து போனர். 12 வயதுப் பாலகன் இந்தக் கேஸைப் பிடிப்பது என்றால் விந்தைதானே?

''தம்பி! உன்னை மெச்சினேன். சில கேள்விகளுக்கு விடை யளிக்கிருயா?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''அப்படியா!'' என்ருன் சுந்தர்.

''ஏன் இவர் முனியனைக் கொல்ல வேண்டும்?''

''காரணம் முனியன் இவருடைய அந்தரங்க ஆள். அவனுக்கு எல்லாம் தெரிந்திருந்தால் அதை வெளியில் சொல்லிவிடுவானே என்று ஐயுற்ற இவர் அவனைக் கொன்றுவிட்டார்'' என்ருன் சுந்தர்.

ஆச்சரியத்தோடு இன்ஸ்பெக்டர் மறு கேள்வியைத் தொடுத்தார்.

''பக்கிரியிடம் எப்படிப் பணம் வந்தது?''

''ஆம். அது பெரிய மனிதரின் வேலைதான்; பணத்தின் எண்ணைக் குறித்துக்கொண்டு அதைப் பக்கிரி வீட்டில் வைத்துவிட்டுப் புகார் செய்திருக்கிருர்'' என்ருன் சுந்தர்.

''சரி. காட்டுப் பங்களாவில் ஏன் போலீசைக் காவல் வைத்தாய்?''

''அதுதான் அவர்களின் இருப்பிடம். இந்நேரம் அந்தக் கண்ணடிக்காரனும், மற்றவர்களும் அகப்பட்டிருப்பார்கள்.''

''ஆ! அப்படியா! நீ துப்பறியும் சிங்கமேதான்'' என்ருர் இன்ஸ்பெக்டர் மகிழ்ச்சி பொங்க.

''சரி, வா. அந்த ஆறுமுகத்தைப் பிடிக்கத் தந்தி யடிப்போம்'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''வேண்டாம்! நான் முதலிலேயே தந்தியடித்துவிட்டேன்'' என்ருன் சுந்தர்.

இன்ஸ்பெக்டர் மகிழ்ச்சிப் பெருக்கால் சுந்தரைத் தூக்கிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினர்.

ஆர்வி

அங்கே ஒரு கடப்பாரை மட்டும் கீழே கிடந்தது. ஒருவன் காளியின் கையிலிருந்த விளக்கைப் பிடுங்கிக் கொண்டு உள்ளே வந்தான். ஆனால் போலீஸ்காரர் களைத் தவிர அங்கே வேறு யாரை யும் காணவில்லை.

''எங்கே அவன்? எங்கே அவன்?'' என்று கத்தினார் இன்ஸ் பெக்டர்.

''எங்கே? எங்கே?'' என்று ஒவ் வொருவரும் அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அந்தச் சின்னக் குடிசையின் மூலே முடுக்கு, பானை, பத்தாயம் எங்கும் பார்த்து விட்டார்கள்.

சின்னப்பக்கிரி தப்பி ஓடிவிட் டான். எப்படித் தப்பினான்?

''ஓடு ஓடு! பிடி பிடி!'' என்று கூவினார் இன்ஸ்பெக்டர். எல் லாரும் அந்தச் சேரியின் நாலா புறமும் விழுந்தடித்து ஓடினார்கள். சின்னப்பக்கிரியைத் தேடினார்கள்.

இருளில் போலீஸார் நாலாபுற மும் ஓடி, தேடிப் பார்த்தார்கள். போலீஸ் வானின் வெளிச்சம் கண்ணைக் கூச வைப்பதுபோல அந்தச் சேரியை நோக்கி அடித்துக் கொண்டிருந்தது. சிலர் டார்ச் லைட் உதவி கொண்டு தேடினார் கள்.

உள்ளே நுழைந்த இன்ஸ்பெக் டர் முகத்தில் வியப்பு, கோபம், அவசரம் எல்லாம் கலந்திருந்தன. அந்தக் குடிசைக்குள்ளிருந்து ஒருவன் அதற்குள் எப்படி மாய மாக மறைந்துவிட முடியும்? இது ஏதாவது குறக்களி வித்தையா? மந்திர மை வித்தையா? ஒன்றும் புரியவில்லை அவருக்கு.

காளி, பத்திரகாளியாக மாறி விட்டாள். ''ஐயையோ! ஓடியாங் களேன்! எல்லாருமா வந்து எங்களை என்னமோ செய்யிறாங்களே!'' என்று பயங்கரமாகக் கூவி, ஊரையே கூட்டிவிட்டாள்.

அந்தக் குடிசைகளிலுள்ள ஆண்-பெண்களில் சிலர் என்னமோ, ஏதோ என்று தடியும் ஆயுதங்களும் எடுத்துக்கொண்டு ஓடோடி வந்த னர். மற்றும் சிலர் விழித்துக் கொண்டே கூச்சலையும், அதன் போக்கையும் கவனித்துக்கொண் டிருந்தார்கள். தெரு நாய்கள், மனிதர்களுடைய ஆரவாரத்துக்கு மேல் ஊரே கிடு கிடாய்க்கும்படி ஒருமிக்கச் சேர்ந்து நீளம் நீள மாகக் குலைத்துக்கொண் டிருந்தன.

''எங்கே அவன்?'' என்று இன்ஸ் பெக்டர் காளியைப் பார்த்து மிரட்டும் குரலில் கர்ஜித்தார். குடிசைக்குள்ளே ஓடிய பூனை புதிய மனிதர்களைக் கண்டு எந்தப் பக்க மாக வெளியேறுவது என்று புரியா மல் பதுங்கிக்கொண் டிருந்தது. சீனனும் ஷங்கங்கும் அதையே கவனித்தார்கள். அதிலும் ஷங்கங் அதன்மீது வைத்த கண்ணை எடுக்கவேயில்லை. இருட்டில் அது சற்றுமுன் அவனை என்ன பாடு படுத்திவிட்டது! அதனால் வந்த

ரகளைதானே இத்தனை அமர்க்களமும்?

சரியான பதில் சொல்லாமல் காளி இன்ஸ்பெக்டர் முன் கூச்சல் போட்டுக்கொண் டிருந்தபோது அந்த வெள்ளைப் பூனை குப்பென்று குட்டைச் சுவரிலுள்ள கூரைமீது தாவிப் பாய்ந்தது. அப்போதுதான் ஷங்கங் கவனித்தான். கூரையில் ஓர் ஆள் புகுந்து போகக்கூடிய அளவில் இடைவெளி இருந்தது. அதன் வழியாகத்தான் பூனை வெளியே செல்ல முயன்றது. அங்குள்ள சந்தடியில் யாரும் பூனையையோ, கூரையில் இருந்த அந்த இடைவெளியையோ, இவையிரண்டையும் கவனித்துக்கொண் டிருந்த ஷங்கங்கையோ கவனிக்கவில்லை. பூனை போலவே ஷங்கங் மெதுவாகப் பதுங்கி, அந்த இடைவெளியினுள் நுழைந்தான். என்ன ஆச்சரியம்! ஒரு ஆள் வெகு சுலபமாக அதன் வழியாக வெளியே தப்பித்துச் செல்ல முடிந்தது. அங்கிருந்து தப்பித்துக்கொண்டால் அருகிலுள்ள கூவத்துக் கரையை எட்டி விடலாம். கரையை எட்டிவிட்டால் பிறகு ஒருவர் கண்ணிலும் படாமல் தப்பித்துச் செல்வதா ஒரு பிரமாதம்?

ஷங்கங் கூவத்தின் இருண்ட கரையையும் அங்கே நிறுத்தப்பட்டிருந்த சின்னப் படகையும் கவனித்தான். அவனுடைய கவனம் வீண் போகவில்லை. கறுப்புக் கம்பளி போர்த்த உருவம் படகைத் தண்ணீரில் தள்ளி, படகுக் கோலைத் தூக்கி வைத்துக்கொண்டது. இதையெல்லாம் கவனித்த அவன், ''ஹோய்!'' என்று கத்தினான். ஆனால் அந்தக் கூச்சல் படகிலிருந்த உருவத்துக்கு மட்டும்தான் கேட்டதே யொழிய, குடிசைகளுக்கு முன்பு உள்ள போலீஸாருக்கோ மற்றவருக்கோ கேட்கவில்லை. உடனே அந்த உருவம் படகுக்குள் தன்னை ஒளித்துக்கொள்ள முயன்றது. ஆனால் ஷங்கங்கின் பார்வையிலிருந்து அது தப்பவில்லை.

ஷங்கங் விரலை மடக்கி விசில் அடித்தான். இன்ஸ்பெக்டர் இதைக் கேட்டு வெளியே வந்துவிட்டார். அவர் பார்த்துக்கொண் டிருக்கும்போதே ஷங்கங், ''எல்லாரும் ஓடி வாங்க! ஆள் அதோ படகில் இருக்கான்! ஜல்தி வாங்க!'' என்று கத்திக்கொண்டே கூரைமீதிருந்து குதித்து, படகை நோக்கி ஓடினான். அவன் படகுப் பக்கமாய் நெருங்குவதற்கும், அதனுள் பதுங்கியிருந்த பக்கிரி எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது.

இன்னும் மயிரிழை தப்பியிருந்தால் ஷங்கங்மீது அவன் பாய்ந்திருப்பான். ஆனால் ஷங்கங், பக்கிரி எதிர்பாராத விதமாக அவனுடைய முதுகின்மீது, மகா துணிச்சலுடன் பாய்ந்து, உடும்பு ஒட்டிக்கொள்வதுபோல் பிடித்துக்கொண்டான். பக்கிரியினால் திமிற முடியவில்லை; உதறி எறிய முடியவில்லை. இன்னும் ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் பக்கிரி அவனோடு சேர்ந்து, கூவம் ஆற்றில் குதித்திருப்பான். ஆனால் அதற்குள் இன்ஸ்பெக்டரும் இன்னும் இரண்டு ஜவான்களும் கையில் துப்பாக்கிகளுடன் ஷங்கங்கின் உதவிக்கு ஓடிவந்து விட்டார்கள்.

''அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசைந்தாயோ உன்னைச் சுட்டுத் தள்ளிவிடுவேன்!'' என்று கூச்சலோடு எச்சரித்தார் இன்ஸ்பெக்டர்.

அப்படி வெறும் எச்சரிக்கையோடு நில்லாமல் ஆகாயத்தை நோக்கி ஒரு முறை சுட்டுக் காண்பித்தார். 'டுமீல்!' என்ற துப்பாக்கியின் சத்தம் கூவம் ஆற்றின் எதிர்க் கரையின்மீது எதிரொலித்துச் சென்றது.

பக்கிரி அசையவில்லை. தப்பி ஓடவோ, தண்ணீரில் குதிக்கவோ முயலவில்லை.

அடுத்த கணம் என்ன நடக்க வேண்டுமோ அது நடந்துவிட்டது. பக்கிரியின் இரண்டு கைகளையும் சேர்த்து, இன்ஸ்பெக்டரின் கட்டளைக்கு இணங்க, இரண்டு போலீஸ்காரர்கள் விலங்கை மாட்டினார்கள்.

* * *

கறுப்புக் கம்பளியைப் போர்த்துக்கொண்டு பறங்கிமலைப் பங்களாவில் கழுத்தை நெறிக்க வந்தவன்

இந்தப் பக்கிரியே என்பதை அறிந்துகொண்ட சீனன் ஆத்திரங் கொண்டான். இவன் எப்படி கிங்கிங்குக்கு அறிமுகமானுன்? எப்படி இவர்கள் இருவரும் சேர்ந்து கொண்டார்கள்? இவர்கள் எதற் காக, என்ன சதி செய்தார்கள்?

உலகத்தில் பல விஷயங்கள் இப் படித்தான் விசித்திரமாகவும் விபரீதமாகவும் நடக்கின்றன. பணம், பதவி இரண்டும் ஒரு வனுக்குக் கிடைத்துவிட்டால் அதற்கு எத்தனை போட்டி, எத்தனை பொருமை! உற்றுர் உறவினர் என்று யாராக இருந் தாலும் அவர்கள் எப்படியெல்லாம் திடீரென்று மாறிவிடுகிருர்கள்! அதற்குச் சின்னப்பக்கிரி மட்டும் விலக்கா, என்ன?

அவன் வழக்கம்போல், பேப்பர் கடைக்காரனிடம் சீனனுடைய சம்பளத்தைக் கேட்டு வாங்கிப் போக வந்தான். அங்கே போன பிறகுதான் சீனன் வீட்டுக்கு இரண்டு நாளாக வராததுபோலவே கடையிலும் வேலை செய்ய வருவ தில்லை என்று தெரிய வந்தது. சின்னப் பக்கிரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இந்த ஷங்கங் பயலோடு சேர்ந்து கொண்டு சீனன் கடைக்கு வராமல் இருக் கிருன் என்று கோபம் கொண் டான். இரண்டு நாளாகக் குடை ரிப்பேர் செய்வதிலும் வரும்படி யில்லை. காளியோ பத்திர காளி யாக விளங்கினுள். தினம் நாலணு எட்டணு சம்பாதிக்கிறவன் வீட்டுப் பக்கமே வராமல் இருந்தால் எரிச்சல் வராதா? அதற்கு அப்புறம் அவர்களுக்கு சீனனைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு வாரம் ஆயிற்று.

அவனுக்குத் திடீரென்று ஏதோ அதிருஷ்டம் வந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஆனுலும் அது எத்தனை பெரிய அதிருஷ்டம் என்பது அவர்களுக்கு முதலில் தெரியாது. சீனனும் ஷங்கங்கும் காரிலே போகக்கூடிய அளவுக்கு வந்துவிட்டார்கள் என் பதைக் கண்ட பிறகுதான் கொஞ்சம் புரியத் தொடங்கியது. அக்கம் பக்கத்தில் அப்படி இப்படி விசாரித்ததில் சீனனுக்கு இப்போது அடித்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள்.

''பிள்ளை, பிள்ளை என்று எடுத்து வந்து வளர்த்தோமே, அந்தப் பிள்ளையைப் பார்த்தியா? நம்ப கிட்டே வந்து உண்மையைச் சொன்னுனு?'' என்று ஆத்திரப் பட்டாள் காளி.

''வரட்டும்; இன்னிக்கு எப்படி யும் அந்தப் பயலைக் கையோடு இருந்து பார்த்துப்புட்டுத்தான் போகிறது—'' என்று கறுவினுன் பக்கிரி.

அன்றுதான் சீனனும் ஷங்கங்கும் டார்ஜான் பிக்சர் பாலஸ் போயிருந் தார்கள். அங்கு நடந்ததையும், அதற்குப் பிறகு நேர்ந்த சம்பவங் களையும் நாம் பார்த்து விட்டோம். சின்னப் பக்கிரியும் காளியும் வண்டிக்குமுன் வந்து நின்று வழி மறித்ததை நாம் பார்த்தோம். அவர்கள் கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாதபடி வண்டி புறப் பட்டுப் போய்விட்டது.

''அட பாவிப் பயலே! கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாதவன் போலப் போறதைப் பாத்தியா?'' என்ருள் காளி.

''காதிலே விழுமா இப்போ?'' என்று பின்னுல் ஒரு குரல் கேட்டது. காளியும் சின்னப் பக்கிரியும் திரும்பிப் பார்த்தார் கள். அங்கே கிங்கிங் நையாண்டி யாகச் சிரித்தபடி நின்ருன்.

''அநாதையா இருந்த பயலை நாங்க கொண்டாந்து வளத்து, சோறு போட்டோம் ஐயா; இப்போ நாங்க நிக்கிறது அவனுக் குக் கண்ணிலேயே படல்லியே!'' என்ருள் காளி.

''அதாம்மா, இப்ப அவனுக்கு எதுவும் காதிலும் விழாது; கண்ணி லேயும் படாது'' என்று அவர் களுடைய ஆத்திரத்தைக் கிளறி விட்டான் கிங்கிங்.

''இப்ப, இப்பங்கிறீங்களே, அப்படி என்ன வந்திடிச்சி இவ னுக்கு இப்போ? அதைத்தான் சொல்லுங்களேன்!'' என்று கேட் டான் சின்னப் பக்கிரி.

''ஆமாம்; இப்படிக் கிட்டே வா. முதல்லே நீ இவனுக்கு என்ன

வேணும்? அதைச் சொல்லு'' என்று கேட்டான் கிங்கிங்.

''நானு? நான் வந்து அவனுக்குச் சித்தப்பன் வேணுங்க!''

''சொந்த சித்தப்பனு?''

இப்படி அவன் கேட்டதும், சின்னப் பக்கிரி அவனை உற்றுப் பார்த்தான். அவனுக்குத் திடீரென்று ஏதோ யோசனையாகப் போய்விட்டது. அவனைப் பார்த்தால் அவன் வெளியூர்க்காரன் என்று உடனேயே தெரிந்துவிட்டது. இதில் அவனுக்கு என்ன அக்கரை வந்தது என்று சந்தேகம் வந்துவிட்டது.

கிங்கிங், விஷமமாகச் சிரித்துக் கொண்டே, ''நான் நெனச்சேன். உன்னைக்கூட இதுக்கு முந்தி எப்போதோ பார்த்த மாதிரி இருக்குது. இதுக்கு முந்தி நீ வேறே எந்த ஊரிலேயாவது இருந்திருக்கியா?'' என்று கேட்டான்.

''ஏன், இருந்திருக்கேன். எம் பேரைக் கேட்டாலே தெரிஞ்சிக்கலாமே. சிங்கப்பூர் சின்னப்பக்கிரிங்கறது தான் எம் பேரு..''

கிங்கிங் தூக்கி வாரிப் போட்டவன்போல் திகைத்து நின்றான். உண்மையிலேயே அவனுக்குத் தூக்கி வாரித்தான் போட்டது. ''எனக்கு எந்த ஊர் தெரியுமா? நானும் அங்கேயிருந்துதான் வந்திருக்கேன்'' என்றான்.

''அப்படிங்களா?''

''ஆமாம்.''

''அப்ப ரொம்பச் சந்தோசங்க. முகத்தைப் பார்த்தாலே தெரியுதுங்க. வந்து..இந்தச் சினனை உங்களுக்கு எப்படித் தெரியுங்க?'' என்றான் பக்கிரி.

கிங்கிங் சிறிது யோசித்தான். பிறகு சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் காளியிடம் கொடுத்து, ''இந்தா, இதை இப்போதைக்குச் செலவுக்கு வச்சிக்க. அப்பறமா இன்னும்கூடத் தரேன். வா, பக்கிரி. போய் எங்கியாவது ஏதாவது சாப்பிட்டுட்டு வரலாம். எங்க ஊரிலே இருந்தவங்களைப் பார்க்கா எங்க ஊரையே பாத்தாப்பலே இருக்கு'' என்றான். காளிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ''நீங்க நல்லாயிருக்கணும்'' என்று சொல்லிவிட்டு அவள் போய் விட்டாள்.

''ஆமா, ஒரு சந்தேகம்?'' என்றான் பக்கிரி.

''என்ன? சினன் விஷயந்தானே! எனக்குத் தெரியும் நீ எதுவும் சந்தேகப்படுவேன்னு. இப்ப அவனுக்கு என்ன வாழ்வு வந்திட்டுதுன்னுதானே கேட்க எண்ணுறே?''

''ஆமாங்க!''

''அப்படிக் கேளு..அதைத்தான் நான் உங்கிட்டே தனியாச் சொல்லணும்னு நினைக்கிறேன். இப்ப அவன் திடீரென்று பணக்காரனு

யிட்டதாக எண்ணிக்கிட்டிருக்கிறான். ஆனால் உண்மையிலே அப்படியில்லே. அது இன்னிக்குத் தெரியுமா அவனுக்கு? அப்புறம் தான் விளங்கும். அது கெடக்கட்டும் வா, போவோம்'' என்று பக்கிரியை அழைத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

''நான் சொன்னதை மட்டும் தட்டாமே கேட்டியோ, உனக்கும் வேண்டிய பணம் கிடைக்க வழியிருக்குது. ஆனல் உன் மேலே எனக்கு நம்பிக்கை வரவேணுமே. எப்படி உன்னை நான் திடீரென்று நம்புவது?'' என்றான் கிங்கிங்.

''அதென்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க! நம்பிக்கை வரும்படியா

எதுவேணாலும் சொல்லுங்க. செய்யாட்டி அப்புறம் பாருங்களேன்!'' என்று வேகமாகக் கூறினான் பக்கிரி.

''முதல்லே இதைச் சொல்லு! இந்தப் பையன் உனக்கு என்ன வேணும்?''

பக்கிரி சிறிது நேரம் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான்; விழித்தான்.

''நீ சொந்தச் சித்தப்பன் இல்லையே?''

வேறு வழியின்றி பக்கிரி உண்மையை ஒப்புக்கொள்ள எண்ணி, இல்லை என்பதுபோல் தலையை ஆட்டினான்.

''சபாஷ்! அப்படியானால் நான் நினைத்ததுதான் சரி. நான் உன்னைப் பணக்காரனாக்குவேன். நீ உடனே ஒரு டாக்ஸி கொண்டு வா. பறங்கி மலைப் பங்களாவுக்குப் போவோம்.

சீனன் வைத்திருக்கும் சு-சூ தோல் பெட்டியை முதலில் அபகரிக்க வேண்டியது உன் பொறுப்பு. அந்த முயற்சியில் அவனுடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நீ தயங்கக் கூடாது. நீ மாட்டிக்கொண்டாலும் என்னைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. அதற்கு என்னுடைய காணிக்கையாக, இந்தா, இதை முதலில் வைத்துக்கொள்!'' என்று தன் பான்ட் பையினுள் கையை விட்டு பத்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

ஆயிரம் ரூபாயை ஒரே சமயத்தில் கண்ட பக்கிரிக்கு மூச்சு முட்டியது. அதை உடனே தன் மடியில் பத்திரமாகச் செருகி வைத்துக் கொண்டு, ''இதோ போய் டாக்ஸி கொண்டு வருகிறேன்! இப்பவே அங்கே போகலாம்!'' என்றான்.

பக்கிரியும் கிங்கிங்கும் இப்படித் தான் ஒன்று சேர்ந்தார்கள்; சதி செய்தார்கள். பாரிஸ்டர் வீட்டிலிருந்து சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டு, பறங்கிமலைப் பங்களாவுக்குச் சென்றபோது கிங்கிங் எதிரே நின்ருன் அல்லவா? அப்போதுதான் பக்கிரி டாக்ஸி கொண்டு வரப் போயிருந்தான். அவர்களுடைய டாக்ஸிதான் சீனனுடைய வண்டியைப் பின்தொடர்ந்தது. ஆனால் முன்னுல் போகும் வண்டியைத் தெரிந்து அவர்கள் பின்பற்றவில்லை.

கிங்கிங் வண்டியைப் பங்களாவின் இறக்கத்தில் நிறுத்தினுன். பக்கிரி மதில் ஏறிக் குதித்து, சாக்கடைக் குழாய் வழியாக மேலே ஏறினுன். இன்ஸ்பெக்டர் நம்பவில்லையே தவிர, சீனன் பார்த்ததாகச் சொன்னது உண்மையே. கிங்கிங் பாதையிலே மரக்கிளையைத் தள்ளிப்போட்டு, ஹோட்டலுக்குத் திரும்பிவிட்டான். பக்கிரி கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். அதுவே அவனுக்கு இரண்டு விதத்தில் நன்மையாக முடிந்தது. அந்தக் கட்டில் பல விசைகள் அடங்கிய கட்டில். சீனன் பத்திரமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்ட சு-சூ பெட்டி, கட்டிலின் அடிப்பாகத்தில் வந்து விழுந்தது. ஒருவிதமான பிரயாசையுமின்றி, சு-சூ பெட்டி கிடைத்ததோடு அவனையும் ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதே சமயத்தில்தான் கிங்கிங் ஹோட்டலிலிருந்து சீனனுக்குப் போன் செய்தான். வாயைத் திறந்தால் உயிர் போய்விடும் என்று மிரட்டியவன் கிங்கிங்தான்,

ஆயினும் என்ன? குற்றவாளிகள் என்றைக்குமே தப்பிவிடுவதில்லை. சிலர் உடனே சிக்கிவிடுவார்கள். சிலர் கொஞ்சநாள் கழித்துச் சிக்கிக் கொள்ளலாம். ஆனால் என்றைக்குமே அவர் செய்த குற்றத்திலிருந்து தப்பித்து விடுவதில்லை. பக்கிரி இப்போது அகப்பட்டுக் கொண்டது அதைத் தான் விளக்கியது.

மறுநாள் பாரிஸ்டர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது யாரோ மறைந்து செல்வதுபோல் இருந்ததாகச் சீனன் கருதினுனே, அதுவும் பக்கிரியின் வேலைதான். அவன்தான் பாரிஸ்டரைப் பார்க்க வந்தவன். பாரிஸ்டருக்குப் பக்கிரியைத் தெரியாது. அவருடைய பாலில் மயக்கப் பவுடரைக் கலந்தவன் அவன்தான். ஆனால் அதைப் பாரிஸ்டர் கவனித்துவிட்டார் என்பது அவனுக்குத் தெரியாது. பிறரை ஏமாற்றுவதிலேயே குறியாக இருப்பவர்கள் தன்னையறியாமலேயே தான் ஏமாறுவதை உணருவதில்லை. ஏமாற்ற எண்ணுகிறவர்களுடைய கதியே இதுதான். தானே ஏமாறுவதை அவர்கள் அறிவதில்லை. பாரிஸ்டர் வீட்டிலிருந்து நீலப் பிளானை எடுத்துச் செல்வது தான் கிங்கிங்கின் திட்டம். முடிந்தால் கிழவருடைய உயிலையும் அதன் நகலையும் அபகரித்துவிட வேண்டும் என்று திட்டம் போட்டான். நீலப் பிளானை அபகரித்து விட்டான். சு-சூபெட்டி கிடைத்து விட்டது; நீலப் பிளானும் கிடைத்துவிட்டது. இனி உயில் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்றுதான் அவன் ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு விட்டான்.

பக்கிரி மட்டும் இல்லாவிட்டால் இவ்வளவும் அவனுக்கு நடந்திருக்குமா?

சீனனுக்கு இப்போது பல விஷயங்கள் ஒரே குழப்பத்தைக் கொடுத்தன. சு-சூ பெட்டியின் மர்மம் என்ன? மண்டையோட்டின் மர்மம் என்ன? கிழவர் அதைக் கண்டு ஏன் முதலில் மூர்ச்சித்து விழுந்தார்? நீலப் பிளானில் என்ன இருக்கிறது? கிங்கிங் ஏறிய கப்பல் புறப்பட்டுவிட்டதா, புறப்படப் போகிறதா? அந்த மண்டை ஓடு மீண்டும் பக்கிரியிடம் எப்படி வந்தது? பக்கிரி, தன் குடிசையினுள் ஏன் பூமியைப் பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தான்? சீனனுக்குப் பக்கிரி சிற்றப்பன் இல்லையென்ருல் அவன் யார்?

இவையெல்லாம் சீனனுக்கு மட்டுமா குழப்பத்தைக் கொடுத்தன? இல்லை; எல்லாருக்கும்தான் குழப்பத்தைத் தந்தன. (தொடரும்)

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

ப. கண்ணன், தஞ்சாவூர்.

கே: கல்கண்டு ஆசிரியரின் உண்மைப் பெயர் என்ன?

ப: அவரையே கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாததால் என்னைக் கேட்கிறாய் என்று எண்ணுகிறேன். என் மூலமாகவும் நீ தெரிந்து கொள்ள முடியாது.

சி. ராஜலிங்கம், மணக்குடி.

கே: புரொபஸர் விஞ்ஞானம் என்று கண்ணனில் எழுதுபவரின் பெயரைச் சொல்ல முடியுமா?

ப: முடியும். அவர்தான் ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி. சிறுவர்களுக்காகவும் பெரியவர்களுக்காகவும் பல அரிய விஞ்ஞான நூல்களை எழுதிப் பிரசித்தி பெற்றவர்.

கே. பி. காசிம், நாகர்கோயில்.

கே: காஷ்மீர் பிரச்னை என்றால் என்ன?

ப: ஐ. நா. பாதுகாப்புச் சபையினர் பொழுது போக்குவதற்காகப் பேசுகிற விஷயம். இந்தியாவின் தலைவலி. பாகிஸ்தானின் பல்வலி.

என். அரங்கராஜி, பழனி.

கே: நீங்கள் யாருக்கு அதிகம் பயப்படுகிறீர்கள்? கடவுளுக்கா அல்லது....?

ப: மனச்சாட்சிக்கு. மனச்சாட்சி தான் நமக்குக் கடவுளின் பிரதிநிதி.

எஸ். வெங்கடேசன், ஆக்கூர்.

கே: ஜனநாயகம் என்றால் என்ன?

ப: ஜனங்களுக்காக, ஜனங்களே, ஜனங்களைக் கொண்டு நடத்தும் ஆட்சி.

பி. வி. அலமேலு, பாண்டிச்சேரி.

கே: சூரியனிடம் பட்சபாதம் உண்டா?

ப: இல்லை; ஆனால் பிரிட்டனில் பொழுதுவிடிவதற்கு $5\frac{1}{2}$ மணிக்கு முன்னதாகவே இந்தியாவில் சூரியன் உதித்து விடுகிறானே. இதற்கு என்ன சொல்லுகிறாய்?

ஜி. அண்ணாமலை, விழுப்புரம்.

கே: பொய்யைக் கொண்டு சுடைசிவரை வெற்றி பெற முடியுமா?

ப: முடியாது. ''பொய்யை வெற்றிகரமாகச் சொல்ல அபார ஞாபக சக்தி வேண்டும். அவ்வளவு ஞாபக சக்தியுள்ள மனிதன் எவனுமே இல்லை'' என்கிறார் ஆப்ரகாம் லிங்கன்.

டி. ரேணுகா, சித்தூர்.

கே: நந்தனார் சரித்திரத்தை இயற்றியவர் யார்? அவருடைய காலம் எது?

ப: நாகப்பட்டணத்துக்கு அருகில் உள்ள நரிமணம் என்ற கிராமத்தில் பிறந்த கோபால கிருஷ்ண பாரதியார். ஏறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு மாயூரத்திலே வாழ்ந்தவர்.

ஆர். நாராயணன், சென்னை-4.

கே: நீங்கள் ஏன் சினிமாவைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் தருவதில்லை?

ப: சினிமாவைப்பற்றிய நுணுக்கங்களைக் கேட்டால் தேவலையே. சினிமாவில் நடிப்பவர்களையும் அவர்களுடைய வரலாறுகளையும் கேட்பதால் ஒருவன் என்ன நன்மை பெறமுடியும்?

மு. கிருஷ்ணமூர்த்தி, கடலூர்.

கே: வாக்காளர் என்று ஏன் பெயர் வந்தது?

ப: வாயை மூடிக்கொண்டு ஆட்சி செய்வதால்!

ப. ராமசந்திரன், சென்னை-1.

கே: நல்ல குறும்பாக ஒரு யோசனை சொல்லுங்கள் பார்க்கலாம்.

ப: உனக்குத் தெரிந்தவர்களாகப் பார்த்து டெலிபோனில் கூப்பிடு. அவர்கள் யாருக்குப் பயப்படுவார்களோ அவர்கள் மிரட்டுவது போல் குரலை மாற்றிக் கொண்டு மிரட்டு. சிலரிடம் கடைசி வரையில் நீ யாரென்று சொல்லாதே. ஆனால், ஒன்று; டெலிபோன் கட்டணத்தோடு, உன்னையே உன் நண்பர் யாராவது திண்டாட விடவும் கூடும். அதற்கும் நீ தயாராக இருக்கவேண்டும். ஏனெனில் எவன் பிறரை ஏமாற்ற எண்ணுகிறானோ, அதிலேயே அவன் ஒரு நாள் ஏமாந்து போவான்.

பு. தாமோதரன், கோவை.

கே: மனித சுபாவத்தை அறிய ஏதேனும் வழியுண்டா?

ப: உண்டு. ஒருவனுடைய சுபாவத்துக்கும் அவனுடைய அங்க சேஷ்டைகளுக்கும் சம்பந்தம் உண்டு என்று அநுபவம் மிக்கவர்கள் கூறுகிறார்கள்.

நாகப்பன், பட்டுக்கோட்டை.

கே: இந்தியாவில் முதல் முதல் நாணயத் தொழிற்சாலை எங்கே, எந்த வருஷத்தில் ஏற்படுத்தப் பட்டது?

ப: கல்கத்தாவில், 1757-இல்.

இரா. உதயசூரியன், கொல்லு மாங்குடி.

கே: இப்பொழுதுள்ள தலைவர்களில் உழைப்பால் உயர்ந்தவர் யார்?

ப: நேருஜிதான். உயர்ந்தவர் மட்டுமல்ல: உயர்ந்த பின்பும் உழைத்து வருபவர். ஒரு நாளில் அவர் கிட்டதட்ட பதினேழு மணி நேரம் இந்த நாட்டுக்காக உழைக்கிறார்.

எஸ். ஆர். கிருஷ்ணசாமி, ஒண்டிப்புதூர்.

கே: ஓவியம் எழுதுவதில் சிறந்தவர் யார் என்று சொல்லுமய்யா!

ப: ஒண்டி இல்லை; ஒவ்வொரு வகையில் ஒவ்வொருவர் இருக்கிறார்கள் என்று புரிந்துகொள்ளும் ஐயா!

ஸி. எஸ். அங்கமுத்து, நம்பியூர்.

கே: நீங்களும் நானும் என்னும் பகுதி (?) (!)க்காக:

ப: உங்களைப் போன்ற (?)வர்களின் (!) காகத்தான்.

எம். பி. இராமசாமி, எம். கே. புதூர்.

கே: கண்ணனில் நீங்களும் நானும் என்னும் பகுதியில் சில கேள்வி - பதில்களுக்குப் படம் போட்டால் என்ன?

ப: உன் நோக்கம் புரிகிறது. எனக்கு வாலும் மூக்கும் வைத்துப் பார்க்கவேண்டும் என்பதுதானே உன் ஆசை? ஆனால் வேடிக்கையாகச் சில வேறு சித்திரங்கள் போடவேண்டும் என்றுதான் எனக்கும் ஆசை.

மா. அருணாசலம், வல்லம்.

கே: மனிதனுக்குப் பணம், குணம் இரண்டிலும் எத்தனை சதவிகிதம் தேவை?

ப: குணம் 100 சதவிகிதம்; மீதி பணம்.

பி. எஸ். நாதன், வேலூர்.

கே: கனவுக்கும் சினிமாவுக்கும் என்ன வித்தியாசம்?

ப; காசு கொடுத்து வேதனைப் படுவது ஒன்றுதான் வித்தியாசம்.

டி. வி. லோகநாதன், சோளிங்கபுரம்.

கே: மிஸ்டர் கண்ணன்! மேல் அட்டைப் படம் பயன் அற்றது. இதைப்பற்றி ஐந்து வரியில் அம்பலப்படுத்துங்கள்.

ப: அ ரொ
ப் ம்
ப ப
டி ச
யா? ரி.

டி. டி. வாசுதேவன், சேத்துப்பட்டு.

கே: யாரை நம்பலாம்? யாரை நம்பக் கூடாது?

ப: ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டு உன்னையே நீ நம்பலாம்? ஆனால் எதற்கும் பிறரை நம்பக் கூடாது.

உலகுக்கு ஓர் ஆசிரியர்

எழுதியவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

வானை மறைக்கும் தென்னந் தோப்புகளும், கண்ணுக்கினிய மேற்குமலைத் தொடரின் இயற்கை வளமும், வாய்க்கினிய நேந்திரம் பழமும், இருமருங்கும் மலைகள் செறிந்து கடல்போல் பரந்து நீண்ட நீர்க் கழிகளும், வெளிநாட்டுச் செல்வத்தை நம் நாட்டுக்குக் கொண்டுவரும் மிளகுக் கொடிகளும் ஏலச் செடிகளும் இலவங்க மரங்களும் நிறைந்தது கேரள நாடு. அந்நாட்டு மக்கள் மேனியெழிலிலும் ஒயிலிலும் அறிவுத் திறத்திலும் இன்றும் சிறந்து விளங்குவதைக் காண்கிறோம். இத்தகைய அழகிய நாடு உலகுக்கு ஒரு பேரறிவாளியைத் தந்து என்றும் குன்றாத புகழ் பெற்றது. பாரத நாட்டின் தத்துவத் துறையில் முன்னணியில் நின்று சுடரொளி பரப்பும் பேராசிரியராகிய சங்கரரின் புகழை இன்று உலகம் அறியும். இளைஞர் சங்கரரைப் போன்ற அறிஞர் நம் நாட்டில் அவருக்கு முன்பு தோன்றியதில்லை; இனித் தோன்றப்போவதும் இல்லை. தாயும் தந்தையும் தவம் செய்து பெற்ற புதல்வர் அவர். பாரதத்தின் தவ நிறைவே உருவாகத் தோன்றிய மகான் அவர்.

சங்கரர் கேரளத்தில் காலடி என்னும் ஊரில் அவதரித்தார். அவர் பிறந்த ஆண்டு இன்னதென்று சரித்திரபூர்வமாகத் தெரியவில்லை. அவருடைய காலம் எட்டாவது நூற்றாண்டு என்பதைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். அவர் அந்த ஊரிலேயே ஆரம்பக் கல்வி பயின்றார். ஆரம்பக் கல்வி என்றால், இப்போது நம் சிறுவர்கள் பயிலும் கல்வியன்று. சங்கரர் தமது ஐந்தாவது பிராயத்துக்குள் காவியங்களிலும் இதிகாசங்களிலும் தேர்ச்சி பெற்றார். அந்தச் சிறு வயதிலேயே அவர் தந்தையை இழந்தார். அவரைப் பெருமகனாக்கிய பெருமை அவர் தாயையே சாரும். பரம்பரையாக வேதக் கல்வியில் கரைகண்ட குலம் அது. எனவே சங்கரர் எட்டாம் பிராயத்துக்கு முன்பே நால்வேதங்களையும் அவற்றைச் சார்ந்த ஆறு அங்கங்களையும் முற்றும் பயின்றுவிட்டார். அவர் மனம் இவ்வுலக வாழ்வின் நுட்பங்களை ஆராய முற்பட்டது. அவர் மேன்மேலும் அறிவை வளர்க்க விரும்பி அதற்கேற்ற குருவை நாடினார்.

"அம்மா, நான் குருவினிடம் சென்று துறவேற்க விரும்புகிறேன். நீ அனுமதி தரவேண்டும்" என்று அவர் தாயை வேண்டினார். அன்னையின் மென்மையான உள்ளம் இதற்கு இணங்குமா? அவள் மறுத்தாள்; ஆனால் இறைவன் இளைஞரின் விருப்பத்தை நிறைவேற்றக் கருதினான்.

சங்கரர் ஒரு நாள் ஆற்றில் மூழ்கியபோது முதலையொன்று அவர் காலைப் பிடித்துக்கொண்டது. ''அம்மா!'' என்று அவர் கூவினார். தாய் பரக்கப் பரக்க ஓடி வந்தாள். ''அம்மா, நான் துறவேற்க நீ இசைந்தாயானால் இந்த முதலை என்னை விட்டுவிடும்'' என்று அவர் சொன்னார். மகனுடைய பிரிவைவிட அவன் உயிர் தானே தாய்க்குப் பெரிது? சரி என்றாள் அம்மா. முதலை அவரை விட்டு நீங்கியது. முதலை மட்டுமா, உலக பாசமே அவரை விட்டு நீங்கியது.

தாய் இசைந்தாளே தவிர, அவர் பிரிந்தபோது அவள் இட்ட ஓலத்தை வருணிக்க இயலாது. ஒரே மகன்; சிறு பிராயம்; அறிவிலோ வியாழனும் அவருக்கு நிகரல்ல; கலைமகளும் அவரது கல்வியைக் கண்டு நாணுகிறாள்; நான்மறைகளும் அவர் நாவில் குடிகொண்டிருக்கின்றன. இத்தகைய புதல்வரைப் பிரிய அந்தத் தாயின் நெஞ்சு இடந்தரவில்லை. துறவேற்க முடிவு கொண்ட இளைஞரின் கண்ணிலும் நீர் துளும்பியது. ''அம்மா, அழாதே. நான் உனக்கு உறுதி மொழி கூறுகிறேன். நீ எப்பொழுது நினைத்தாலும் அப்பொழுது உன் சங்கரன் உன்னிடம் வருவான். கண்ணீர் பொழிந்து என் வழியைத் தடுக்காதே. நான் துறவியானாலுங்கூட, உன் அந்திமக் கிரியையை நானே செய்வேன்'' என்று அவர் மொழிந்தார். 'மகனோ அறிவு தேடச் செல்கிறான்; பிறவியின் பயனை எய்தப் போகிறான்' என்று கருதிய தாய், அவருக்கு ஆசி கூறி அனுப்பினாள்.

எட்டே ஆண்டு நிரம்பிய சங்கரர் கையில் சமிதையும் உள்ளத்தில் அறிவு வேட்கையும் கொண்டு குருவை நாடி வடக்கே புறப்பட்டார். அந்தக் காலத்தில் ரெயிலா, விமானமா? அவர் ஒவ்வோர் ஊராக நடந்து சென்றார். காலடியில் பிறந்த அவருடைய காலடி பட்டு இந்த நாட்டின் ஒவ்வோர் ஊரும் பெருமை அடைந்தது. இப்படிச் சென்ற சங்கரர் விந்திய மலையை அடைந்தார்.

நல்ல மாணவன் கிடைக்க வேண்டுமே என்ற கவலை ஆசிரியருக்கும் உண்டு. விந்திய மலையடி

'மூட்டை'

எண்ணிலே கட்டடங்கள்

1 முதல் 9 வரை



வாரத்தில் நர்மதையாறு சுழித்துப் பாயும் கரையில், கோவிந்தபாதரின் தூய ஆசிரமம் நிலவியது. சங்கரர் அந்த ஆசிரமத்துள் சென்று ஆசிரியரைக் கண்டார்.

சங்கரரின் வாழ்வில் அது பொன்னன நாள். மாணவனுடைய பணிவும் பணிவிடையும் ஆசிரியரைக் கவர்ந்தன. அன்றே பாடம் தொடங்கியது. பிரம்ம சூத்திரம், உபநிடதம், கீதை ஆகிய மூன்றுக்கும் பிரஸ்தானத் திரயம் என்று பெயர். ஹிந்து மதத்துக்கு இதுவே வேர். இந்த நூல்களுடன் இவற்றுக்கு உதவியான மீமாம்சை, நியாயம் முதலியவற்றையும் சங்கரர் பயின்றார். மாணவனுடைய அறிவு வளர்பிறைபோல ஓங்குவதைக் கண்டு ஆசிரியர் மகிழ்ந்தார். இப்படி இணைந்த குரு சிஷ்யர்களைக் காண்பது அரிது. கோவிந்தபாதரின் ஆசிரமம் இருந்த இடம் இன்னது என்பதை இன்று உறுதியாகக் கூற முடியவில்லை.

கல்விப் பயிற்சி முற்றுப் பெற்றதும் இளைஞர் சங்கரர், தம் நல்லாசிரியரின் ஆசியோடு, பிரஸ்தானத் திரயத்துக்கு அரிய உரையாக, பாஷ்யங்களை இயற்றினார். ஆசிரியரிடமிருந்து அரிதில் பெற்ற செல்வத்தை அவர் இவ்வாறு வெளியிட்டு உலகுக்கு வழங்கினார். இந்த உரைகளை இன்று படித்தாலும் சங்கரர் எத்தகைய பேராசிரியர் என்பது நன்றாக விளங்கும். இக்காலத்திய கல்லூரிப் பேராசிரியர்களும் பின்பற்றக்கூடிய வகையில் அவை அமைந்திருக்கின்றன. கடினமான விஷயத்தையும் எளிய நடையில் எப்படிச் சொல்ல முடியும், மாணவனுக்கு அலுப்பு ஏற்படாமலும் அவன் சிரித்த முகத்தோடு கேட்கும்படியும் விரிவுரை எங்ஙனம் அமைய வேண்டும் என்பவற்றுக்குச் சங்கரருடைய பாஷ்யங்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அவர் வேதங்களினின்றும் வேறுஇடங்களினின்றும் மேற்கோள் கூறும்போது, அவை விஷயத்தோடு பொருந்தி இயல்பாகவே தோன்றும். 'நான் சொல்கிறேன்; ஆதலால் நீ கேட்க வேண்டும்' என்ற வற்புறுத்தல்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள்

அவர் நூல்களில் எங்குமே இல்லை. அவர் தம் கொள்கையை விளக்கும்போது, பிறர் ஐயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்து விடை கூறுவார். இப்படித் தடைவினாக்களும் விடைகளும் கூறுவதனால், எல்லா வகைகளிலும் ஒரு விஷயத்தை முழுக்கப் பார்த்த அமைதியும் களிப்பும் ஏற்படும். அழகழகான உவமைகளும் ஹாஸ்யப் பேச்சும் நடுவே விரவியிருக்கும். மூல நூலில் அசைநிலை என்று பிறர் கூறக்கூடிய சொற்களுக்கும் நயமான உரை வகுப்பார். தொகைநிலைத் தொடர்களைப் பிரித்தும் இலக்கணச் சான்றுகள் காட்டியும் அங்கங்கே பொருளைத் துலங்க வைப்பார். அத்தியாயம் முடிவுறுந்தோறும் அந்த அத்தியாயத்தின் சாரத்தைச் சுருக்கமாகச் சொல்வார். ஒவ்வொரு விஷயத்தையும் படித்து முடித்ததும், இனி அதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது யாதும் இல்லை என்ற திருப்தி மாணவனுக்கு உண்டாகும்.

சங்கரர் இளமையிலேயே ஆற்றிய பெருஞ்செயல்கள் பல. அவர் பௌத்தர்களையும் மீமாம்சகர்களையும் தம் வாதங்களால் வழிக்குக் கொண்டு வந்தார். தென்னாட்டில் அக்காலத்தில் கடுமையாக இருந்த சைவ வைணவப் போராட்டங்களை ஒழித்தார். சிவனும் திருமாலும்

ஒன்று என்று நிலைநாட்டினார். தம் கொள்கைகளைப் பரப்ப, நாடு முழுவதும் சுற்றினார்.

அன்னைக்கு வாக்குறுதி கொடுத்த படி அவர் தாயின் அந்திம காலத்தில் அவளுக்குப் பணிவிடை செய்யத் தமது ஊருக்கு எழுந்தருளினார். அவள் உயிர்பிரிந்தபோது பக்கத்திலேயே இருந்து அவளுக்கு உபதேசம் செய்தார். கண்ண பிரானை அவள் காணும்படி செய்த தாகவும் வரலாறு சொல்கிறது. அவளுக்கு அந்திமக் கிரியையை ஆசாரியர் தாமே செய்து நிறைவேற்றினார். அது துறவறத்துக்குப் புறம்பானது என்று கூறி, கிராமத்து அந்தணர் சமூகம் அவரை விலக்கியது. அன்னையைத் தகனம் செய்யவும் அவர்கள் அவருக்கு உதவவில்லை. அவர் தம் வீட்டு வாசலில் தண்ணீர்ப் பாத்திரமும் கையுமாக நின்றார்; உலர்ந்த சுள்ளிக்கோலைத் தம் வலது தோளில் கடைந்து தீயை உண்டாக்கி அன்னையின் ஈமச்சடங்கை நிறைவேற்றினார்.

சங்கரர் இளமையும் அறிவும் அஞ்சாநெஞ்சமும் படைத்தவர். பல ஊர்களுக்குச் சென்று பல பெரும்புலவர்களோடு அவர் சொற்போர் செய்யவேண்டியிருந்தது. தங்கம்போலப் பளபளக்கும் மேனியும் அறிவு ஒளி வீசும் முகமும் அனைவரையும் கவர, இந்தக் குறுகிய வடிவமுள்ள இளைஞர், "அறிஞர்களே, வாருங்கள். உங்களில் ஒவ்வொருவரும் ஒரு கேள்வியைக் கேளுங்கள்; அல்லது ஒவ்வொருவரும் பல கேள்விகளைக் கேளுங்கள். உங்களில் பலரும் ஒரு கேள்வியைக் கேளுங்கள், அல்லது பலரும் பல கேள்விகளைக் கேளுங்கள். அத்தனைக்கும் நான் விடை தருகிறேன்" என்று அறைகூவி நிற்பார். அவர்கள் கேட்கும் வினாக்கள் அனைத்துக்கும் தர்க்க முறையில் விடை கூறுவார். இறுதியில் அவர்கள் யாவரும் அவருக்கு அடியராகிவிடுவர். 'உலகுக்கு ஓர் ஆசிரியர்' என்ற புகழ் இத்தகைய இளைஞரான சங்கரருக்கே தகும். நம் நாட்டு இளைஞர்களுக்கு அவருடைய வாழ்வும் வாக்கும் என்றும் உறுதியும் பயனும் தந்து நிலவும்.

சங்கரருடைய கொள்கையைக் காத்துப் பரப்பும் மடங்களுள், காஞ்சி காமகோடி பீடம் மிகவும் பிரசித்தமானது. அந்தப் பீடத்தை இன்று அலங்கரிக்கும் ஸ்ரீமத்சங்கராசாரிய ஸ்வாமிகள், ஐம்பது ஆண்டுகளாக உலக நன்மைக்குப் பாடுபட்டு வருகிறார்கள். இந்த ஐம்பதாண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் எங்கும் விமரிசையாக நிகழ்கிறது. தவ வடிவான இந்த ஆசாரியர் பல்லாண்டுகள் வீற்றிருந்து நம் நாட்டு இளைஞர்களுக்கு அறிவும் நன்மையும் மேன்மையும் ஓங்க அருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

கண்ணன் புத்தாண்டு இதழில்

துப்பறியும் மோகன்

முதல் பரிசு பெற்ற தொடர்கதை

தே. பார்த்தசாரதி

எழுதியது

ஆரம்பமாகிறது

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்கு நண்பர்கள், உறவினர்கள் தரக் கூடிய சிறந்த பரிசு கண்ணன் வெளியீடுகள். ஐந்து முதல் பதினாறு வயதுவரை உள்ள சிறுவர், சிறுமியரின் அறிவு வளர்ச்சிக்கும் ஆசைப் பொழுது போக்குக்கும் ஏற்றபடி அமைந்தவை. குறைந்த விலையில் அழகான அட்டைப் படங்களுடன் கூடிய அருமையான புத்தகங்கள். இப்போது கைவசம் உள்ளவை.

		ரூ.	அ.
1.	லீடர் மணி - ஆர்வி ..	1	8
2.	சந்திரகிரிக் கோட்டை - ஜனு ..	1	4
3.	அசட்டுப் பிச்சு - ஆர்வி ...	1	0
4.	அபாயச் சங்கு - நீலம் ...	0	8
5.	விளையும் பயிர் - கி. வா. ஜ. ..	0	8
6.	ஜக்கு - ஆர்வி ..	0	8
7.	ஜம்பு - ஆர்வி ..	0	8
8.	விஞ்ஞானம் பேசுகிறார் - பெ. நா. அ. ..	0	8
9.	மின்னல் அரக்கன் - ஜனு ..	0	8
10.	ஏரிக்கரை மாளிகை - ஜனு ..	0	8
11.	கழுகும் கிளியும் - 'சோமசன்மா' ..	0	8
12.	தவளையும் காளையும் - 'சோமசன்மா' ..	0	8
13.	பாரஸீக ரோஜா - சித்திரக் கதை ..	0	5
14.	குளிகைத் தீவு - சித்திரக் கதை ..	0	4
15.	மாஸ்டர் பாலகுமார் - சித்திரக் கதை ...	0	4
16.	தூங்கும் அழகி - சித்திரக் கதை ...	0	4
17.	நீச்சல் பழக்கம் - பயிற்சி ..	0	3
18.	கோழி விதைத்த நெல் - பாட்டுக் கதை ..	0	3
19.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் ..	0	3
20.	என் பேர் என்ன? ..	0	3

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

(Regd, as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

2c

கலைமகள்

பொருள் விளக்கப் படங்கள்

மண் எண்ணெயின் கதை, ஆற்றின் கதை, தீப் பெட்டியின் கதை, கடிதத்தின் கதை, பட்டின் கதை, பென்ஸிலின் கதை முதலிய விஷயங்களைப் படங்கள் மூலம் விளக்கும் சுவர்ப் படங்கள். 20"×30" பரப்புள்ள தாளில் கொட்டை எழுத்துக்களில் கண்ணைக் கவரும் இரு வர்ணங்களில் தயாரிக்கப்பட்டவை. நீண்டகாலம் இருக்கவேண்டுமெனும் நோக்குடன் சிறந்த காகிதத்தில் 'போட்டோ லித்தோ' முறையில் தயாரிக்கப் பெற்றவை.

சிறந்த பொது அறிவைப் போதிக்கும் இந்தப் படங்கள் ஆரம்பப் பள்ளி, ஆரம்ப உயர்தரப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, போதனுமுறைப் பள்ளி முதலியவைகளுக்கு மிகவும் உபயோகமானவை. வீட்டிலேயே குழந்தைகளுக்குப் போதிக்கவும், முதியோர் கல்விக்கும் அவசியமானவை.

ஆறு படங்கள் அடங்கிய செட் ரூ. 4/-

(போதனுமுறை விளக்கம் இலவசம்.)

தபால் செலவு தனி.

பாடப் படங்கள்

கண்ணைக் கவரும் 45 வர்ணப் படங்கள் மூலம் தமிழ் வார்த்தைகளையும் எழுத்துக்களையும் விளையாட்டாக வீட்டில் குழந்தைகள் தெரிந்துகொள்ளலாம். 45 படங்கள், வார்த்தைகள், எழுத்துக்கள், பயிற்சி முறை அடங்கியது ஒரு செட்.

புதிய பாடத் திட்டப்படி சிறந்த அறிஞர்களால் தயாரிக்கப்பெற்றது.

ஆரம்ப, போதனுமுறைப் பள்ளிகள், முதியோர் கல்விச்சாலைகள் ஆகியவைகளுக்கு மிகவும் இன்றியமையாதவை.

விலை ரூ. 1/8

கலைமகள் காரியாலயம், சென்னை-4